# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice



நீ சொல்வதோடு முரண்படுகிறேன், ஆனால் அதைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமைக்காக உயிருள்ள வரையில் நான் போராடுவேன்... – வால்ட்டேர்

http://www.youthkiawaaz.com/wp-content/uploads/2015/10/16/youth-speak-freedom-of-speech/twitter-freedom-of-speech1.jpg

# சுற்றறிக்கை

*பொருள்: காவல்துறை – 'குஜராத் மாநில அரசு எதிர் கிஷன்பாய்' வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கேற்ப செயல்படுதல் – தரமான புலன்விசாரணையை உறுதிப்படுத்த மாவட்ட அளவில் குழு அமைத்தல் – தொடர்பாக*

பார்வை: 1. 'குஜராத் மாநில அரசு (எதிர்) கிஷன்பாய்' வழக்கில் **07.01.2014** தேதியிட்ட குற்றவியல் மனு எண் **1485/2008**ல் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைகள்

2. அரசு. கடிதம் (Ms) எண்.**956**, உள்துறை (Pol 12) தேதி **23.12.2015** மற்றும் **24.03.2016**.

*****

மேற்கண்ட பார்வை 1ல் குறிப்பிட்டுள்ளபடி மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது:

"இதன்படி, தவறு செய்யும் புலனாய்வு / வழக்குரை அதிகாரிகள் / அலுவலர்கள் (அரசு வழக்குரைஞர்கள்) அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு நடைமுறையை ஒவ்வொரு மாநில அரசின் உள்துறையும் உருவாக்க வேண்டும் என்று நாங்கள் ஆணையிடுகிறோம். வெறும் கவனக்குறைவால் அல்லது குற்றமுறு குறைபாடுகள் காரணமாக ஒரு அரசுத் தரப்பு வழக்கு தோல்வியடைவதற்குப் பொறுப்பான இத்தகைய தவறு செய்யும் அதிகாரிகள் / அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டு, துறைவாரி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேற்கூறியவாறு ஏற்படுத்தப்படும் அமைப்பு புலன் விசாரணை மற்றும் வழக்குத் தொடுத்தல் கடமைகளை செயல்படுத்துவதில் அக்கறையை ஏற்படுத்தும், அது புலன் விசாரணையும் வழக்குத் தொடுப்பதும் பயனுள்ளதாக, தீர்மானகரமானதாக அமைவதை உறுதிப்படுத்தும்."

2. பார்வை 2ல் குறிப்பிட்டுள்ளபடி, காவல்துறை தலைமை இயக்குநருக்கும், அரசு வழக்குத்துறை இயக்குநருக்கும் ஒரு நிலைக் குழுவை ஏற்படுத்தவும், அனைத்து விடுவிப்பு ஆணைகளையும் அந்த குழுவின் மூலமாக பரிசீலிக்கவும் ஆணையிட்டுள்ளது. குழு கண்டறியும் உண்மைகள் அடிப்படையில், தனிப்பட்ட வழக்குகளில் பொருத்தமானதாக இருக்கக்கூடிய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், அரசாங்கத்தின் ஆய்வுக்காக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒரு கால வரையறைக்குட்பட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

3. 2012 முதல் 2014 வரையில் ஒவ்வொரு ஆண்டிலும் சராசரியாக 70,000 வழக்குகள் விடுவிக்கப்படுவதிலேயே முடிந்துள்ளன. விடுவிக்கப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தையும் ஒரு மாநில அளவிலான நிலைக்குழு பரிசீலிப்பது சாத்தியமில்லாமல் போகக்கூடும். ஆகவே, மாவட்ட / நகர அளவிலான நிலைக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும், காவல்துறை மற்றும் அரசு வழக்குத்துறை உயரதிகாரிகளைக் கொண்டதாக, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணைகளை சட்டப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் பயன் விளைவிக்கத்தக்க முறையிலும் செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட வேண்டும் என கருதப்படுகிறது. இத்தகைய நிலையில், மாநிலம் முழுவதுக்குமான ஒரு மாநில அளவிலான நிலைக்குழு ஆய்வு செய்வதற்கு பதிலாக மாவட்ட / நகர அளவிலான நிலைக்குழு சம்பந்தப்பட்ட மாவட்டம் சார்ந்த வழக்குகளை பயன்விளைவிக்கத்தக்க முறையிலும், விரைவாகவும் ஆய்வு செய்ய முடியும்.

4. மேற்கூறிய காரணங்களுக்காகவும் அரசாங்க ஆணைகளின்படியும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணைகளைச் செயல்படுத்துவதற்காகவும், ஒவ்வொரு மாவட்டம் / நகரத்திற்கு, காவல்துறை மற்றும் அரசு வழக்குத்துறை அதிகாரிகளைக் கொண்ட "மாவட்ட / நகர அளவிலான நிலைக்குழு" அமைப்பது என்று முடிவு செய்யப்படுகிறது.

5. அதன்படி, ஒவ்வொரு மாவட்டம் / நகரத்துக்கு பின்வரும் அதிகாரிகளைக்கொண்ட "மாவட்ட / நகர அளவிலான நிலைக்குழு" அமைக்கப்படுகிறது:

| மாவட்டங்கள் / சிறப்பு அலகுகள் | நகரங்கள் |
|---|---|
| 1. காவல்துறை கண்காணிப்பாளர்<br>2. கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் (தலைமையகம்)<br>3. அரசு வழக்குத்துறை உதவி இயக்குநர் / துணை இயக்குநர் | 1. காவல்துறை ஆணையர்<br>2. காவல்துறை துணை ஆணையர் (குற்றவியல்)<br>3. அரசு வழக்குத் துறை உதவி இயக்குநர் // துணை இயக்குநர் |

6. இவ்வாறு அமைக்கப்படும் நிலைக்குழுவானது தங்களது அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதிகளில் விடுவிக்கப்பட்ட அனைத்து வழக்குகளையும் ஆய்வு செய்யும், ஒவ்வொரு வழக்கையும் தனிப்பட்ட முறையில் பரிசீலித்து, புலன்விசாரணையில் மற்றும் / அல்லது வழக்கு தொடுத்ததில் அல்லது இரண்டிலும் தவறுகள் ஏதேனும் நடந்திருந்தால் அதனை உறுதிப்படுத்தும். இக்குழுக்கள் தங்களது கூட்டங்களை மாதம் ஒருமுறை நடத்த வேண்டும். வெறும் கவனக்குறைவு அல்லது குற்றமுறு குறைபாடுகள் காரணமாக அரசு வழக்கு தோல்வியடைந்ததற்கு பொறுப்பான தவறு செய்த புலனாய்வு / அரசு வழக்குத் துறை அதிகாரிகளை நிலைக்குழு கண்டறியும்.

7. இத்தகைய ஆய்வில் கண்டறியப்படும் உண்மையின் அடிப்படையில், தவறு செய்த புலனாய்வு / அரசு வழக்குத்துறை அதிகாரிகள் மீது இத்தகைய குறைபாடுகளுக்காக, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பால், தேவையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8 மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தலைமை அலுவலகத்தால் அரசாங்கத்திற்கு அதன் ஆய்வுக்காக ஒரு காலமுறையிலான அறிக்கை தவறாமல் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

காவல்துறை தலைமை இயக்குநருக்காக

தமிழ்நாடு

பெறுநர்

நகரங்களில் அனைத்து காவல்துறை ஆணையர்கள்
மாவட்டங்களில் அனைத்து காவல்துறை கண்காணிப்பாளர்கள்
அனைத்து சிறப்பு அலகு அதிகாரிகள்

நகல்:

அரசு வழக்குத்துறை இயக்குநர், சென்னை

## தமிழ்நாட்டில் உள்ள காவல்துறை பொதுத்தகவல் அலுவலர்களின் விவரம்:

| பொது தகவல் அலுவலர் / உதவி பொது தகவல் அலுவலகம்/ மேல்முறையீட்டு பொது தகவல் அலுவலகம்/ மாநகர காவல் அலுவலகங்கள் | பொது தகவல் அலுவலர் / உதவி பொது தகவல் அலுவலர் / மேல்முறையீட்டு பொது தகவல் அலுவலகம் / மாவட்ட காவல் அலுவலகங்கள் | | |
|---|---|---|---|
| **துணை காவல் ஆணையாளர் (PIO) (தலைமையிடம்)** | **கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) (PIO)** | | |
| 1. சென்னை மாநகர காவல்<br>2. திருச்சி மாநகர காவல்<br>3. மதுரை மாநகர காவல்<br>4. கோயம்புத்தூர் மாநகர காவல்<br>5. சேலம் மாநகர காவல்<br>6. திருநெல்வேலி மாநகர காவல்<br>7. திருப்பூர் மாநகர காவல் | 1. திருவள்ளூர்<br>2. காஞ்சிபுரம்<br>3. விழுப்புரம்<br>4. கடலூர்<br>5. வேலூர்<br>6. திருவண்ணாமலை<br>7. தர்மபுரி<br>8. கிருஷ்ணகிரி<br>9. சேலம்<br>10. நாமக்கல்<br>11. கோயம்புத்தூர்<br>12. ஈரோடு<br>13. திருப்பூர் | 14. நீலகிரி<br>15. திருச்சி<br>16. பெரம்பலூர்<br>17. அரியலூர்<br>18. கரூர்<br>19. புதுக்கோட்டை<br>20. தஞ்சாவூர்<br>21. நாகப்பட்டினம்<br>22. திருவாரூர்<br>23. மதுரை<br>24. விருதுநகர்<br>25. திண்டுக்கல் | 26. தேனி<br>27. இராமநாதபுரம்<br>28. சிவகங்கை<br>29. திருநெல்வேலி<br>30. தூத்துக்குடி<br>31. கன்னியாகுமரி<br>32. இரும்பு பாதை காவல்துறை சென்னை<br>33. இரும்பு பாதை காவல்துறை திருச்சி |

# இந்திய உச்சநீதிமன்றம்

## குற்றவியல் மூலத் தீர்ப்பு

ஆணை கோரும் மனு (CRL) எண் 68/2016

இந்திய இளைஞர் வழக்குரைஞர் சங்கம் மனுதாரர்(கள்)

(எதிர்)

இந்திய அரசு மற்றும் இதரர்கள் எதிர்மனுதாரர்(கள்)

ஆணை

விதி பிறப்பிக்க வேண்டும்

2. இந்திய அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 32ன் கீழ், மனுதாரராகிய இந்திய இளைஞர் வழக்குரைஞர் சங்கம் இந்த ஆணை கோரும் மனுவில், இந்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இந்திய எல்லைக்கு உட்பட்ட அனைத்து காவல் நிலையங்களிலும் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு முதல் தகவல் அறிக்கையையும், கூடுமான விரைவில், பதிவு செய்யப்பட்ட 24 மணி நேரத்துக்குள் என்பது ஏற்கத்தக்கது, அனைத்து மாநிலங்களின் காவல்துறை அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என செயலுறுத்துக் கட்டளை (Mandamus) வடிவில் ஆணையிடக் கோரியுள்ளது.

3. ஆணை கோரும் மனுவை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொண்ட பிறகு இந்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டது.

4. மனுதாரருக்காக ஆஜராகிய கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சான்ப்ரீத் சிங் அஜ்மானி, முதல் தகவல் அறிக்கை பதிவான பிறகு காவல்துறை வலைத்தளத்தில் அது பதிவேற்றம் செய்யப்படுமானால், அது குற்றம் சாட்டப்பட்ட நபர்களாலும் அவர்களது குடும்பத்தினராலும் எதிர்கொள்ளப்படும் பல தேவையற்ற பிரச்சனைகளைத் தீர்த்துவிடும் என்று வாதிட்டுள்ளார். குற்றவியல் சட்டம் செயல்படுத்தப்பட்டு, ஒரு தனி மனிதரின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறபோது, தனது சுதந்திரத்தை அவர் பாதுகாத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதுவாக அவருக்கு அந்தத் தகவல் கிடைக்க வேண்டும் என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் கூறியுள்ளார். இந்தப் பின்னணியில், அவர் மேற்கு வங்க அரசு மற்றும் இதரர் எதிர் மேற்கு வங்க ஜனநாயக உரிமைகள் பாதுகாப்புக் குழு மற்றும் இதரர் (2010) 3 SCC 571 வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பை மேற்கோள் காட்டியுள்ளார். அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

"சட்டத்தால் நிலைநாட்டப்பட்டுள்ள நடைமுறைகளின்படி என்பதைத் தவிர்த்து, மனிதர்கள் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 21 விரிந்த தொலைநோக்குடன் வழிசெய்கிறது. மேற்கூறிய சட்ட உரையானது அதன் விரிவான பயன்பாட்டில், குற்றம் சாட்டப்பட்ட ஒருவருடைய உரிமைகள் மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்டவருடைய உரிமைகளும் செயல்படுத்தப்படுவதைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்கிறது. அரசாங்கத்தின் சொந்த அதிகாரிகள் உள்பட தண்டனைக்குரிய ஒரு குற்றத்தைச் செய்ததாக குற்றம் சாட்டப்படும் எவரொருவர் மீதும் நியாயமான பாகுபாடற்ற புலன் விசாரணையை மேற்கொள்வதன் மூலம் குடிமக்கள் ஒவ்வொருவரின் மனித உரிமைகளைச் செயல்படுத்துகிற கடமை அரசுக்கு உரியது. சில நிலைமைகளில் குற்றத்திற்கான ஒரு சாட்சிகூட அரசின் பாதுகாப்பைக் கோரலாம், அந்தப் பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட வேண்டும்."

5. சோம் மிட்டல் எதிர் கர்நாடக அரசு (2008) 3SC753 வழக்கில் உச்சநீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது:

"அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 21ன் கீழ் சுதந்திரத்திற்கான உரிமை என்பது ஒரு மதிப்பு மிக்க உரிமையாகும், ஆகவே அதில் இலகுவாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்த உரிமை ஐரோப்பிய, அமெரிக்க மக்களால் மாபெரும் வரலாற்றுப் போராட்டங்களாலும், தியாகங்களாலும் பெறப்பட்டதாகும். இங்கே, சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய, 'எ டேல் ஆஃப் டு சிட்டீஸ்' நாவல் நினைவுகூரத்தக்கது. அதில் வருகிற டாக்டர் மானெட், நிரபராதி என்றபோதிலும் கூட ஒரு பிரெஞ்சு அரண்மனைவாசி ஒருவரின் வெறும் கடிதத்திற்காக 18 ஆண்டுகள் பாஸ்டைல் சிறையில் அடைக்கப்படுவார்."

6. டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு AIR1997 SC 610 வழக்கில் உச்சநீதிமன்றம் பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளது:

"அரசமைப்பு சாசனத்தின் 21, 22(1) ஆகிய சட்ட உரைகளில் கூறப்பட்டுள்ள உரிமைகள் மிகுந்த எச்சரிக்கையோடும், கண்காணிப்போடும் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். இந்தப் பிரச்சனையை நாம் ஒதுக்கிவிட முடியாது. புலன்விசாரணையின்போதோ, விசாரணையின்போதோ அல்லது வேறு வகையிலோ எந்த ஒரு வடிவத்திலும் கொடூரமாக சித்ரவதை செய்தல், மனிதத்தன்மையற்ற முறையில் அல்லது இழிவுபடுத்தும் முறையில் நடத்துதல் ஆகியவை அரசமைப்பு சாசனத்தின் 21வது சட்ட உரையை மீறுவதேயாகும். அரசாங்கத்தின் அங்கமாகச் செயல்படுவோர் சட்டத்தை மீறுகிறவர்களாக மாறுவார்களேயானால் அது சட்டத்தை அவமதிக்கிற செயலாகும், சட்டம் செயல்படாத நிலையை அது உருவாக்கும், ஒவ்வொரு மனிதருக்கும் தான் வைத்ததே சட்டம் என்ற மனநிலையை ஏற்படுத்தும், இது ஒரு அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும். நாகரீகமுள்ள எந்தவொரு நாடும் இவ்வாறு நிகழ அனுமதிக்க முடியாது. குடிமக்களில் ஒருவரை ஒரு போலீஸ்காரர் கைது செய்கிற அந்தக் கணத்திலிருந்து உயிர்வாழ்வதற்கான அவரது அடிப்படை உரிமைகளை அவர் இழந்துவிடுகிறாரா, குடிமக்களில் ஒருவர் கைது செய்யப்படுவதால் அவரது உயிர்வாழும் உரிமை விலக்கி வைக்கப்பட்டுவிடுமா ? இந்தக் கேள்விகள் மனித உரிமை நீதிக்களத்தின் முதுகெலும்பைத் தொடுகின்றன. இக்கேள்விகளுக்கான விடை திட்டவட்டமாக "இல்லை" என்று சொல்வதாகவே இருக்க வேண்டும். இந்திய அரசமைப்பு சாசனத்தின் 21வது சட்ட உரையில் உறுதியளிக்கப்பட்டுள்ள இந்த மதிப்பு மிக்க உரிமை, சட்டத்தால் அனுமதிக்கத்தக்க வகையில் இத்தகைய நியாயமான கட்டுப்பாடுகளை சட்டப்படி நிலைநாட்டப்பட்ட நடைமுறையின் கீழ் அல்லாது, குற்றவாளி என அறிவிக்கப்பட்டவர்களுக்கோ, காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கோ காவலில் உள்ள மற்ற கைதிகளுக்கோ மறுக்கப்பட முடியாது."

7. திரு அஜய் சௌதாரி மூலமாக தனது சொந்த நடவடிக்கையாக நீதிமன்றம் எதிர் அரசு (2010) 175 DIT110 (DV) வழக்கில் தில்லி உயர்நீதிமன்றத்தின் இரட்டை நீதிபதிகள் அமர்வுக் குழு (டிவிஷன் பெஞ்ச்) ஒன்று அளித்த தீர்ப்பையும் மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் எங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

8. இந்திய அரசுக்காக ஆஜரான கூடுதல் தலைமை சட்ட வல்லுநர் திரு துஷார் மேத்தா, அவரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தில்லி உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் சில திருத்தங்களோடு செயல்படுத்தப்பட முடியும் என்று கூறியுள்ளார். தற்போதைய மனுவில் ஒரு இடைநிலை விண்ணப்பமாக தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தின் 4வது பத்தியில் கூறப்பட்டிருப்பதையும் அவர் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். அந்தப் பத்தி வருமாறு:

"4. 'குற்றம் மற்றும் குற்றவியல் பின்தொடர்தல் கட்டமைப்பு மற்றும் செயல்முறைகள்' (CCTNS) பாதுகாப்பின் கீழ், இணையம் மூலமாக புகார்களைப் பதிவு செய்வதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உதவுகிறது என மரியாதையுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."

9. உத்தர்கண்ட் மாநில அரசின் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு சௌரப் திரிவேதி, பாலியல் குற்றங்கள், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் (PoCSo Act) கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் போன்ற, சில குற்றங்கள் பதிவு செய்யப்படும்போது அவற்றை வலைத்தளத்தில் வெளியிடுவது சிரமமாகக் கூடும் என்று கூறியுள்ளார்.

10. மேகாலயா, மிசோரம், சிக்கிம் ஆகிய மாநிலங்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர்கள் முறையே திரு ரஞ்சன் முகர்ஜி, திரு ஷிகார் கார்க், திரு யூசுப் கான் ஆகியோர், உள்நாட்டுக் கலகம் என்பது ஒரு சிக்கலான பிரச்சனை என்றும் அத்துடன் மேற்கூறிய மாநிலங்களுக்கு 24 மணி நேரத்துக்குள் முதல் தகவல் அறிக்கைகளை பதிவேற்றம் செய்வது சாத்தியமாகாமல் போகக்கூடும் என்று வாதிட்டனர்.

11. ஒடிஷா மாநிலத்திற்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. உத்யம் முகர்ஜி, ஒரு பிரச்சனை சிக்கலானதோ இல்லையோ, முதல் தகவல் அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டே பிரச்சனையை எடுத்துக்கூறுவதாக இருப்பதால் காரணம் எதுவும் கூறக்கூடாது என்று நீதிமன்றம் சொல்லக்கூடும் என்று வாதிட்டார்.

12. சம்பந்தப்பட்ட தரப்பினரின் கற்றறிந்த வழக்குரைஞர்கள் வைத்த வாதங்களைக் கேட்டதன் அடிப்படையில், உரிய முடிவுகளைப் பதிவு செய்வதும், அதைத் தொடர்ந்து பின்வரும் ஆணைகளைப் பிறப்பிப்பதும் பொருத்தமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்:

a. குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Cr.P.C.) 207வது பிரிவின் கீழ் கூறப்பட்டிருப்பதைவிட முன்கூட்டியே பெறுவதற்கு உரிமை உண்டு.

b. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் ஒரு குற்றவியல் வழக்கில் தான் இழுக்கப்பட்டிருப்பதாகவும், தனது பெயர் முதல் தகவல் அறிக்கையில் இடம் பெறக்கூடும் என்றும் சந்தேகப்படுவதற்கு காரணங்கள் இருக்குமானால், அவர் தனது பிரதிநிதி / முகவர் / வழக்குரைஞர் மூலமாக, நீதிமன்றத்திடம் இருந்து அத்தகைய நகலை பெறுவதற்கான கட்டணத்தைச் செலுத்தியதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரியிடம் அதன் ஒரு சான்றளிக்கப்பட்ட நகலைக் கோரி விண்ணப்பிக்கலாம் அல்லது காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் 24 மணி நேரத்துக்குள் நகல் அளிக்கப்பட வேண்டும்.

c. முதல் தகவல் அறிக்கையானது காவல்நிலையத்தால் சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது எந்தவொரு சிறப்பு நீதிபதிக்கு அனுப்பப்பட்டவுடன், குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பாக சான்றளிக்கப்பட்ட நகலுக்காக விண்ணப்பம் அளிக்கப்படுவதன் அடிப்படையில், இரண்டு வேலை நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தால் நகல் வழங்கப்பட வேண்டும்.

d. பாலியல் குற்றங்கள், உள்நாட்டுக் கலவரங்கள், பயங்கரவாதம் மற்றும் அவ்வகையான குற்றங்கள், POCSO சட்டத்தின் கீழ் வருகின்ற குற்றங்கள் போன்ற சிக்கலான தன்மையுள்ள குற்றங்கள் அல்லாத நிலையில், முதல் தகவல் அறிக்கை நகல்கள் காவல்துறை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அத்தகைய வலைத்தளம் இல்லையென்றால் மாநில அரசின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில், குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எவரொருவரும் முதல் தகவல் அறிக்கையை தரவிறக்கம் செய்யவும், தனது குறைக்கான தீர்வு கோருவதற்கான சட்டத்தின்படி நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்யவும் ஏற்றவகையில், முதல் தகவல் அறிக்கை நகல்கள் 24 மணி நேரத்துக்குள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். புவியியல் இடம் சார்ந்த தொடர்புப் பிரச்சனைகள் இருக்குமானால் அல்லது வேறு ஏதேனும் தவிர்க்க முடியாத சிரமம் இருக்குமானால் இந்தக் கால அவகாசத்தை 48 மணி நேரமாக விரிவுபடுத்திக் கொள்ளலாம் என்று இங்கு தெளிவுபடுத்தப்படுகிறது. இந்த 48 மணி நேரமானது அதிகபட்சமாக 72 மணி நேரம் வரை நீட்டிக்கப்படலாம், அது புவியியல் இடம் சார்ந்த தொடர்புப் பிரச்சனைகளுக்கு மட்டுமே இது பொருந்தும்.

e. காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அல்லது அதற்கு இணையான பதவியில் உள்ளவருக்குக் கீழ்நிலையில் உள்ள அலுவலரால், முதல் தகவல் அறிக்கை நகலை வலைத்தளத்தில் வெளியிடுவதில்லை என்ற முடிவு எடுக்கப்படக்கூடாது. மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு இதில் ஒரு பங்கு இருக்கக்கூடிய மாநிலங்களில், இந்த அதிகாரம் அவருக்கும் உண்டு. சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி அல்லது மாவட்ட மாஜிஸ்ட்ரேட் எடுக்கிற முடிவு சம்பந்தப்பட்ட அதிகார வரம்புள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

f. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உரிய அதிகாரியால் சிக்கலானது என்று கருதப்படும் இதர அம்சங்களுக்கு அப்பாற்பட்டு, ‘சிக்கலானது’ என்ற வார்த்தையானது முதல் தகவல்அறிக்கையின் தன்மையைப் பொறுத்து தனி உரிமை என்ற கருத்தாக்கத்தையும் உள்ளடக்கியதாகும். சிக்கலான வழக்குகள் என்பது தொடர்பாக தரப்பட்டுள்ள உதாரணங்கள் முழுக்க முழுக்க சித்தரிப்புக்காக உள்ளவைதானேயன்றி அவையே முழுமையானதல்ல.

g. ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவேற்றம் செய்யப்படவில்லையென்றால், அது Cr.P.C. சட்டம் 438வது பிரிவின் கீழ் பலனைப் பெறுவதற்கான ஒரு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

h. வழக்கின் சிக்கலான தன்மை அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை நகல் வழங்கப்படவில்லை என்ற நிலையில், மேற்கூறிய நடவடிக்கையால் பாதிக்கப்படும் ஒரு நபர், தனது அடையாளத்தைத் தெரிவித்த பிறகு, காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது மாநிலத்தில் அதற்கு இணையான பதவியில் உள்ளவரிடம் விண்ணப்பிக்கலாம். காவல்துறை ஆணையர் உள்ள பெரு நகரங்களைப் பொறுத்தவரையில் ஆணையருக்கு

ஒரு விண்ணப்பம் அளிக்கப்படும் நிலையில், அவர் மூன்று அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் குழுவானது, விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் விண்ணப்பதாரரின் குறை குறித்து கையாள வேண்டும். அதனை பாதிக்கப்பட்ட நபருக்குத் தெரிவிக்க வேண்டும்.

i. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உரிய அதிகாரி, இங்கு ஆணையிடப்பட்டிருப்பதன் அடிப்படையில் அந்தக் குழுவினர் இன்றிலிருந்து எட்டு வாரத்திற்குள் அமைக்க வேண்டும்.

j. வழக்கின் சிக்கலான தன்மையைக் கருதி முதல் தகவல் அறிக்கை நகல்களை வழங்குவதில்லை என்ற முடிவுகள் எடுக்கப்பட்டிருக்குமானால், குற்றம் சாட்டப்பட்டவர் / அவரது அதிகாரப்பூர்வ பிரதிநிதி / வழக்குரைஞர், அந்த முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்ட நீதிமன்றத்திடம் சான்றளிக்கப்பட்ட நகல் அளிக்கக் கோரி ஒரு விண்ணப்ப மனு தாக்கல் செய்யலாம். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் முறைப்படி நகலை வழங்க வேண்டும்.

k. அனைத்து மாநிலங்களின் வலைத்தளங்களில் முதல் தகவல் அறிக்கையை பதிவேற்றம் செய்வதற்கான ஆணைகள் 2016 நவம்பர் 15ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட வேண்டும்.

13. இந்த ஆணையின் நகல் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அனைத்து உள்துறைச் செயலர்களுக்கும் காவல்துறை தலைமை இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட வேண்டும்.

14.. இதன்படி, ஆணை கோரும் மனு, தீர்வு செய்யப்படுகிறது.

**நீதிபதி தீபக் மிஸ்ரா**

**நீதிபதி சி. நாகப்பன்**
புதுதில்லி
செப்டம்பர் 07,2016

## *நீதிபதிகள் நியமனத்தில் நீண்ட தாமதம் ஏன்? நாடாளுமன்ற குழு விசாரணை*

**புதுடெல்லி:** நீதிபதிகள் நியமனத்தில் மிதமிஞ்சிய தாமதம் ஏற்படுவது குறித்து நாடாளுமன்ற நிலைக்குழு ஆய்வு செய்யவுள்ளது. மாநில முதல்வர்கள் மற்றும் தலைமை நீதிபதிகள் மாநாடு கடந்த ஏப்ரல் 24ம் தேதி நடந்தது. இதில் பேசிய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்கூர், ”நாடு முழுவதும் 3 கோடி வழக்குகள் நிலுவையில் உள்ளன. நீதிபதிகளின் எண்ணிக்கையை 21 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரமாக உயர்த்த அரசு நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த 2015ம் ஆண்டு நிலவரப்படி கீழ் நீதிமன்றங்களில் 4,432 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன. உயர்நீதிமன்றங்களில் 450 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன” என்றார். இந்நிலையில் நீதிபதிகள் நியமனத்தில் ஏற்பட்டுள்ள மிதமிஞ்சிய தாமதம் குறித்து மத்தியப் பணியாளர் மற்றும் பயிற்சித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு விசாரிக்க முடிவு செய்துள்ளது. அதில் சட்ட அமைச்சக அதிகாரிகள் ஆஜராகி தங்கள் நிலையை தெரிவிப்பர். சிபிஐ, சிவில் சர்வீஸ் செயல்பாடு குறித்தும் நாடாளுமன்ற நிலைக்குழு ஆய்வு செய்யவுள்ளது.

**ஆதாரம்: தினகரன், 13 அக்டோபர் 2016.**

# குடிமக்களைக் கைவிடும் நீதிமன்றம்

தேசத் துரோகச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது பற்றிய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது உண்மை நிலைமைகளிலிருந்து உச்சநீதிமன்றம் விலகியிருப்பதைக் காட்டுகிறது.

1860ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் 124A பிரிவு தவறாகப் பயன்படுவதற்கு எதிராக ஆணைகள் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பொது நோக்க ஆணை கோரும் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கிறது. இதன் மூலம் நீதிமன்றம் தனது நீதிசார்ந்த கடமையை நிறைவேற்றுவதில் பெரிதும் தவறியிருக்கிறது. தேசத் துரோகச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக மனுதாரர் எழுப்பிய கவலைகளை உடனடியாக தள்ளுபடி செய்ய முடிவு செய்ததன் மூலம் நீதிமன்றம் தனது வளாகத்திற்கு வெளியே நடைபெறும் சம்பவங்களில் கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டு விட்டது.

1962ல் இச்சட்டத்திற்கு ஒரு விளக்கம் அளிக்கப்பட்டது. காவல்துறையினர் மாநில அரசிடமிருந்தோ மத்திய அரசிடமிருந்தோ எந்த நிர்ப்பந்தமும் இல்லாமல் நல்ல நோக்கத்துடன்தான் இந்தச் சட்டத்தைப் புரிந்துகொண்டு பயன்படுத்துகிறார்கள் என்று கூறப்பட்டது. ‘சொல்வதெல்லாம் நம்பகமானதே’ என்ற கற்பனை உலகத்தில் வாழ்ந்திருக்க நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மாற்றுக் கருத்துகளைச் சொல்வோர், பழியுணர்வு கொண்ட அரசாங்கத்தால் எவ்வித அத்துமீறல் வடிவத்திலும் எவ்வித ஒடுக்குமுறைகளையும் எதிர்கொள்ளாத ஒரு மாயையான மண்ணில் நீதிபதிகள் நடமாடுவதுபோல் தெரிகிறது. கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையானாலும் சரி, கன்னயா குமார் மீது அல்லது சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனம் மீதான சமீபத்திய புகார்களானாலும் சரி, எல்லா வகையான அரசாங்கங்களானாலும், எதிர்ப்பை ஒடுக்குவதற்காக 124A பிரிவு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

வழக்குகள் எண்ணிக்கை குறைவு என்பதற்காக, மாற்றுக் கருத்துகளின் மீது ஒரு அச்சுறுத்தல் விளைவை ஏற்படுத்துவது என்ற அரசின் உள்நோக்கத்திற்கு திரையிட்டுவிடக்கூடாது. அரிதான வழக்குகளைத் தவிர்த்து பெரும்பாலும் ஒரு புகாரைத் தொடர்ந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிடுகிறது. குற்றம் சாட்டப்பட்டவளை குற்றவியல் நீதி அமைப்பு துளைத்தெடுக்கத் தொடங்கிவிடுகிறது. அவள் எவ்வளவு அப்பாவியானாலும், தன்னைக் காத்துக்கொள்ள முதல் தகவல் அறிக்கையிலிருந்து தனது பெயரை நீக்கச் செய்வதற்காக நீதிமன்றத்திற்கும் காவல் நிலையத்திற்குமாக ஓட வேண்டியிருக்கிறது. புகாரும், முதல் தகவல் அறிக்கையும் முற்றிலும் போலியானவை என்று இறுதியாக ஒரு நீதிமன்றம் கண்டுபிடிக்கிறது என்றாலும்கூட, அப்பட்டமான அந்த சட்டவிரோத செயல்களுக்காக எந்த ஒரு நிவாரணமோ இழப்பீடோ, வழக்கிலிருந்து விடுவிக்கப்படுகிறவளுக்கு வழங்கப்படுவதில்லை. அதற்காக அவள் மீண்டும் ஒரு நீதிமன்றத்திலிருந்து இன்னொரு நீதிமன்றத்திற்கு ஓடுவது என்று முடிவு செய்தால் மட்டுமே அது கிடைக்கும். இவ்வாறு நேரடியாக சட்ட நடைமுறைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கான மேற்பார்வை ஏற்பாடு ஒன்றை நீதிமுறைப்படி உருவாக்க வேண்டும் என்பதே அந்த பொது நோக்க மனுவின் எளிய கோரிக்கை. அதைத்தான் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கிறது.

உச்சநீதிமன்றத்தின் இந்த ஆணையே கூட குழப்பமாகத்தான் இருக்கிறது. எப்படியானாலும், அண்மையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பின்னணியில் பார்க்கிறபோது இது உச்சநீதிமன்றத்தின் கருத்தைத்தான் சுட்டிக்காட்டுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே கிரிமினல் அவதூறு சட்டங்கள் அரசமைப்பு சாசனப்படி செல்லுபடியாகக்கூடியவையே என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. கருத்துச் சுதந்திர உரிமையை விட மரியாதை உரிமையே மேலானது என்று கூறி, ஒரு புதிய அடிப்படையை ஏற்படுத்தியது. பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்துகிற (புகழ்பெற்ற நபர்கள் மீதான அவதூறு) அந்த அடிப்படை அரசமைப்பு சாசனத்திலேயே இல்லாததாகும். சீக்கிய சமூகத்திற்கு எதிரான நகைச்சுவைகளை முறைப்படுத்துதல் தொடர்பான பொது நல மனுவை எடுத்துக்கொண்டது. தற்போதுள்ள சட்டங்களுக்கு அப்பால் ஆபாசப் படங்களுக்கு எப்படி தடை விதிக்கலாம் என்பதையும் எடுத்துக்கொண்டது.

அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நீதிமன்றத்தின் அரசமைப்பு சாசனப்பூர்வமான கடமை. ஆனால் நீதிமன்றம் இந்த உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டறிவதுதான் தனது வேலை என கருதுவதாகத் தெரிகிறது. தான்தோன்றித்தனமான, அபத்தமான மனுக்களை சில துறுதுறுப்பானவர்கள் தாக்கல் செய்கிறார்கள். மற்றவர்களுடைய உரிமைகளை ஒடுக்க உதவுவதும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர உரிமையைக் கட்டுப்படுத்த விரும்புகிற அரசாங்கத்தின் பக்கம், அதேபோல் பணக்காரர்களின் பக்கம், பலமுள்ளவர்களின்

பக்கம் நிற்பதுமே அந்த மனுக்களின் நோக்கம். ஷ்ரேயா சிங்கால் எதிர் இந்திய அரசு வழக்கில், வழக்கத்துக்கு மாறாக முடிவெடுத்த உச்சநீதிமன்றம், தகவல் தொழில்நுட்பச் சட்டம்–2000, பிரிவு 66A செல்லாது எனத் தீர்ப்பளித்தது. ஆனால், இப்படிப்பட்ட தீர்ப்புகள் மேலும் மேலும் அரிதாகி வருகின்றன. அரசமைப்பு சாசனத்தின்படி, கருத்து வெளிப்பாட்டு உரிமைக்கு முழு சக்தியை வழங்கிய அந்தத் தீர்ப்பு, அந்தச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிற ஒரு சட்டத்தின் உண்மையான தாக்கம் நடப்பில் எப்படி இருக்கும் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூறியது. ஒரு கெடு வாய்ப்பாக உன்னதமான இந்த அணுகுமுறையை நீதிமன்றம் மீண்டும் மீண்டும் நிராகரித்து வந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்படி வழக்கின் தீர்ப்பை நீதிமன்றம் ஒரு வழக்கில் கூட எடுத்துக்காட்டவில்லை.

**எவ்வளவு அப்பாவியானாலும், தன்னைக் காத்துக்கொள்ள முதல் தகவல் அறிக்கையிலிருந்து தனது பெயரை நீக்கச் செய்வதற்காக நீதிமன்றத்திற்கும் காவல் நிலையத்திற்குமாக ஓட வேண்டியிருக்கிறது. புகாரும், முதல் தகவல் அறிக்கையும் முற்றிலும் போலியானவை என்று இறுதியாக ஒரு நீதிமன்றம் கண்டுபிடிக்கிறது என்றாலும்கூட, அப்பட்டமான அந்த சட்டவிரோத செயல்களுக்காக எந்த ஒரு நிவாரணமோ இழப்பீடோ, வழக்கிலிருந்து விடுவிக்கப்படுகிறவளுக்கு வழங்கப்படுவதில்லை.**

இந்தியாவில் கருத்துச் சுதந்திரத்தின்மீது நீதித்துறைக்கு ஒரு எதிர்மறையான அணுகுமுறையே இருக்கிறது என்ற ஒரு வருத்தத்துக்குரிய காட்சியை இது காட்டுகிறது என்றால், அத்தகைய காட்சியைத்தான் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே செய்யப்பட்டதாகும். இந்த நிலைமை ஏற்பட்டதில் உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கைகளை பிரதான ஊடகங்கள் எப்படி வெளியிட்டு வருகின்றன என்பதற்கும் பங்கு உண்டு. நீதிபதிகளின் அமர்வுக் குழுக்கள் சொல்லக் கூடிய சாதாரணமான, சிதறலான கருத்துகளுக்கு இந்த ஊடகங்கள் முக்கியத்துவம் அளிக்கின்றன. அரசியல்வாதிகளும் பிரபலமானவர்களும் சம்பந்தப்படுகிற வழக்குகள் விசாரிக்கப்படுகிற, முடிக்கப்படுகிற சாதாரண நடைமுறைகளையும் பெரிதுபடுத்துகின்றன.

இதனால், ஒரு நிறுவன அமைப்பு என்ற முறையில் உச்சநீதிமன்றத்தின் சித்தாந்தம், செயல்முறைகள் விமர்சனத்திற்கு உட்படுத்தப்படுவதில்லை. விதிவிலக்காக, எப்போதாவது ஒரு சர்ச்சைக்குரிய தீர்ப்பு வருகிறபோது மட்டும், நீதிமன்றத்தின் தலையீடு என்று வழக்கம்போல் அலுப்பூட்டும் விமர்சனங்கள் வருகின்றன. அதிலும், நீதிமன்றம் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பது பற்றிய ஒரு ஆழ்ந்த கருத்துகள் இருப்பதில்லை.

கருத்துச் சுதந்திரம் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் சமீபத்திய போக்குகள், இந்தியாவில் கருத்துச் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பான உண்மை நிலைமைகளிலிருந்து நீதிமன்றம் விலகியிருப்பது அதிகரித்து வருகிறது என்பதையே காட்டுகிறது.

அவதூறு குற்றச் சட்டங்கள் அல்லது தேசத்துரோக குற்றச் சட்டங்கள் போன்றவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது எதிரான வழக்குகளில் உச்சநீதிமன்றம் தனது அமர்வுக் குழுக்களின் மூலம் நீதிபோதனைகளை சந்தோஷமாக வழங்குகிறது, ஆனால் அவ்வாறு சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு வழிசெய்கிற கட்டமைப்புகளை அப்படியே வைத்துக்கொள்கிறது.

ஒரு நிறுவன அமைப்பாக, அரசின் ஆக்கிரமிப்புகளில் இருந்து குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அரசமைப்பு சாசனப்பூர்வமான கடமை நீதிமன்றத்திற்கு இருக்கிறது. சுதந்திரம், தனிப்பட்ட உரிமை ஆகியவை தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் கருத்துகள் உண்மையான அக்கறையோடு கூறப்பட்டவைதான் என்று எடுத்துக்கொள்வதானால், அந்த சுதந்திரமும் தனிப்பட்ட உரிமையும் பரந்துபட்ட மக்களுக்குப் பலனளிப்பதாக இருக்க வேண்டுமே அல்லாமல், நீதிமன்றத்தின் சொந்த நிறுவனரீதியான தேவைகளுக்குப் பயன்படுவதாக இருக்கக் கூடாது என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்தியாக வேண்டும்.

**ஆதாரம்: எகனாமிக் & பொலிடிகல் வீக்லி, செப்டம்பர் 10, 2016 (தலையங்கம்)**

# அப்சல் குரு வழக்கு: விவாதிக்கப்படாத ஓர் அம்சம்

– அனுராக் பாஸ்கர்

*உச்சநீதிமன்றம் தவறு செய்யாது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால், நீதிபதிகளும் மனிதர்கள்தான். நீதிமன்றத்தின் தீர்ப்புகள், குறிப்பாக மரண தண்டனைத் தீர்ப்புகள், விமர்சனங்களுக்கு உட்படாமல் இருக்க முடியாது. அப்சல் குரு வழக்கில் மரண தண்டனை அளித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை, அந்த வழக்கில் கிடைத்த ஆதாரங்கள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதை வைத்துப் பார்க்கிறபோது, சரியானதாகக் கருதுவதற்கில்லை.*

நாடாளுமன்றம் தாக்கப்பட்ட வழக்கில் (தில்லி அரசு எதிர் நவஜோத் சந்து, 2005) மரண தண்டனை அளிக்கப்பட்ட அப்சல் குரு தூக்கில் தொங்கவிடப்பட்டதன் மூன்றாம் ஆண்டின் நினைவை அனுசரிக்கும் வகையில், சில மாணவர்கள் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு கண்டன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தபோது பெரும் எதிர்ப்புக் கூச்சல் எழுந்தது. அந்த மாணவர்களுக்கு "தேச விரோதிகள்" என முத்திரை குத்தப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்துவிட்டதாக அவர்கள் கண்டனத்துக்கு உள்ளானார்கள். "இந்திய எதிர்ப்பு" முழக்கங்கள் நிச்சயமாக விரும்பத்தகாதவைதான். அதேபோல் நாட்டின் குடியரசு தினத்தை "கறுப்பு தினம்" என்று அனுசரிப்பதோ, காந்தி கொலை செய்யப்பட்டதைக் கொண்டாடுவதோ நிச்சயம் விமர்சனத்துக்குரிய செயல்கள்தான்.

அதேவேளையில், உச்சநீதிமன்றத்தை விமர்சிப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. விமர்சனத்துக்குரிய பல தீர்ப்புகள் உள்ளன. ஏமாற்றம் அளிக்கும் அத்தகைய தீர்ப்புகளில் ஒன்றுதான் ஜபல்பூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர் (AIR 1976) வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு (SC1207). அவசர நிலை ஆட்சிக்காலத்தில் அளிக்கப்பட்ட அந்தத் தீர்ப்பு இவ்வாறு சொல்கிறது:

"ஒருவரைக் காவலில் வைப்பதற்கான ஆணை சட்டவிதிகளின்படி இல்லையென்பதாலோ அல்லது சட்டத்துக்குப் புறம்பானது என்பதாலோ அல்லது தவறான உள்நோக்கம் கொண்டது எனக் கூறப்படுவதாலோ அல்லது சட்டப்பூர்வமானதாக இருந்தாலோ அல்லது உள்நோக்கம் உள்ள காரணங்களுக்காக என்றாலோ, ஒரு உயர்நீதிமன்றத்தில் சட்ட உரை 226ன் கீழ், ஆள்கொணர் உத்தரவு கோரியோ அல்லது வேறு உத்தரவு கோரியோ அல்லது அந்தக் காவல் ஆணையின் சட்டப்பூர்வ செல்லுபடித்தன்மை குறித்து ஆணை கோரியோ மனுத் தாக்கல் செய்ய எந்தவொரு நபருக்கும் சட்டப்பூர்வ உரிமை கிடையாது." இதேபோல் உச்சநீதிமன்றம் அண்மையில் அளித்த ஏமாற்றமளிக்கும் தீர்ப்பு ராஜ்பாலா எதிர் ஹரியானா அரசு (AIR 2016, SC 33) வழக்கில் தரப்பட்டதாகும். கல்வியறிவற்றவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் நிற்க முடியாது என்று தடை விதித்து ஹரியானா மாநில அரசு கொண்டு வந்த ஹரியானா பஞ்சாயத்து ராஜ் திருத்தச் சட்டம், 2015 அரசமைப்பு சாசனப்படி செல்லத்தக்கதுதான் என உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியது. மின்வாரியத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தில் பாக்கி வைத்திருப்பவர்கள், கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தாதவர்கள் ஆகியோரும் தேர்தலில் போட்டியிட அந்தச் சட்டம் தடைவிதிக்கிறது.

**உயிர்ப் பிரச்சனை**

மரண தண்டனையைப் பொறுத்தவரையில், தேவை ஏற்படுமானால், அந்த ஆணையை ஆய்வுக்கு உட்படுத்துவதோ, விமர்சிப்பதோ மிகவும் முக்கியமானதாகிறது. ஒருமுறை உயிரைப் பறித்துவிட்டால் அதைத் திருப்பித் தர முடியாது. தவறுகள் செய்திருப்பதை உச்சநீதிமன்றமேகூட ஒப்புக்கொண்டுள்ளது. உத்தரபிரதேச மாநிலத்தின் லோகாயுக்தா நியமன வழக்கு, அருணாச்சலப்பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட அரசமைப்பு சாசன நெருக்கடி தொடர்பான வழக்கு உள்ளிட்டவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆனால், மரண தண்டனை என்று வருகிறபோது, தவறு நடந்துவிட்டது என ஒப்புக்கொள்வதால் என்ன பயன் ?

2012ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற 14 நீதிபதிகள் குடியரசுத் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பினார்கள். அதில், 1996 முதல் 15 பேருக்கு மரண தண்டனை அளித்ததில் உச்சநீதிமன்றம் தவறு செய்திருக்கிறது என்றும், அவர்களில் 2 பேர் தூக்கிலிடப்பட்டுவிட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2009ல், உச்சநீதிமன்றமே கடந்த 15 ஆண்டுகளில் 15 பேருக்கு தவறான முறையில் மரண தண்டனை அளித்ததாக ஒப்புக்கொண்டது. சந்தோஷ் குமார் ஷாந்திபூஷன் பாரியார் எதிர் மஹாராஷ்டிர மாநில அரசு வழக்கில் (2009, 6 SCC 498) இவ்வாறு உச்சநீதிமன்றம் தனது தவறை ஒப்புக்கொண்டுள்ளது. (1) ராவ்ஜி என்ற ராம் சந்திரா எதிர் ராஜஸ்தான் அரசு (1996, 2 SCC 175), (2) சிவாஜி என்ற தாத்யா சங்கர் அல்ஹாத் எதிர் மஹாராஷ்டிரா அரசு (2008, 15SCC 269), 3 மோஹன்

அன்னா ஸவான் எதிர் மஹாராஷ்டிரா அரசு (2008, 11 SCC 113), (4) பான்டு எதிர் உத்தரபிரதேச அரசு (2008, 11 SCC 113), (5) சுர்ஜா ராம் எதிர் ராஜஸ்தான் அரசு (1997, CriLJ 51), (6) தயாநிதி பிஸ்நோய் எதிர் ஒரிஸ்ஸா அரசு (2003, CriLJ 3697), (7) உத்தரபிரதேச அரசு எதிர் சாத்தன் (2009, 4 SCC 736) ஆகிய வழக்குகளில் அளிக்கப்பட்ட மரண தண்டனைகள் தவறான கணிப்பில் தரப்பட்டவை அல்லது அறியாமல் தரப்பட்டவை என்று உச்சநீதிமன்றம் அப்போது கூறியது.

பச்சன் சிங் எதிர் பஞ்சாப் அரசு (1980), (2SCC 684) வழக்கில் அமைக்கப்பட்ட அரசமைப்பு சாசன அமர்வுக் குழு, "அரிதிலும் அரிதான" என்ற கோட்பாட்டுடன் முரண்படுவதாக மேற்படி தீர்ப்புகள் அமைந்தன. இது குறித்து, சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் இவ்வாறு கூறுகிறார்: "நீதி தவறான முறையில் கொடுக்கப்பட்டது என்பதற்கு இதைவிட மோசமான எடுத்துக்காட்டு இருக்க முடியாது. தண்டனை அளிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் உச்சநீதிமன்றம் தனது தவறை ஒப்புக்கொண்டது என்பது காலம் கடந்த செயலே ஆகும். தவறான தீர்ப்புகள் காரணமாக அவர்கள் தூக்கிலிடப்பட்டுவிட்டார்கள்."

## நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கு

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு அப்சல் குரு குற்றவாளிதான் என்பதை இறுதியாக உறுதிப்படுத்துகிறது என்று பொதுவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால், தில்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியும், இந்திய சட்ட ஆணையத்தின் முன்னாள் தலைவருமான அஜித் பிரகாஷ் ஷா, அவசரமாக, "ரகசியமாக" அப்சல் குரு தூக்கிலிடப்பட்டது அரசாங்கம் செய்த தவறு என்கிறார். இந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு "முற்றிலும் அரசியல் சார்ந்தது" என்று அவர் சித்தரித்துள்ளார்.

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் அப்சல் குருவுக்கு எதிரான நேரடி ஆதாரம் எதுவும் இல்லை என்பதால் அவரைக் குற்றவாளி என அறிவிக்க முடியாது என்று மூத்த வழக்குரைஞர் ராம்ஜெத்மலானி வாதிட்டார். ஆனால், அதனை நீதிபதிகள் பி.வெங்கடராமி ரெட்டி, பி.பி. நௌலேகர் ஆகியோர் கொண்ட அமர்வு நிராகரித்துவிட்டது. ஆயினும் கிடைத்துள்ள ஆதாரம் சந்தர்ப்ப சூழலை அடிப்படையாகக்கொண்டதே என்று அந்தத் தீர்ப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தாக்குதலின்போது சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு பயங்கரவாதியான முகமது, அப்சல் குரு இருவருக்குமிடையே அடிக்கடி தொலைபேசி வழியாக உரையாடல் நடந்தது என்பதே, அப்சல் குரு குற்றவாளி என அறிவிப்பதற்கு அடிப்படையாக அமைந்த சந்தர்ப்ப சூழல் சாட்சியமாகும். எலெக்ட்ரானிக் தொழில்நுட்பம் சார்ந்த தொலைபேசி உரையாடல் பதிவுகள் ஏற்கத்தக்கவைதானா என்பது தொடர்பாக முன்வைக்கப்பட்ட பின்வரும் கருத்தை நீதிமன்றம் நிராகரித்தது:

> "*குற்றம் சாட்டப்பட்ட ஷௌகத் சார்பில் ஆஜராகும் திரு. சாந்தி பூஷன், ஷௌகத் பயன்படுத்தியதாகக் கூறப்படும் செல்போன் எண் 919811573506 தொடர்பான அழைப்புப் பதிவுகள் சட்ட விதிகளின்படி நிருபிக்கப்படவில்லை. ஆகவே, அவை எந்த அளவுக்குச் சரியானவை என்பது சந்தேகத்திக்கு உரியது என்ற வாதத்தை முன்வைத்துள்ளார். கிலானி, அப்சல் ஆகியோர் தொடர்பான இதர மொபைல் எண்கள் சார்ந்த அழைப்புப் பதிவுகள் குறித்தும் இதே விமர்சனம் வைக்கப்பட்டுள்ளது. ஆதாரச் சட்டத்தின் சட்டக்கூறுகள் (a) முதல் (e) வரையில் கூறப்பட்டுள்ள விவரங்களுடன், பிரிவு 65க்ஷ துணைப் பிரிவு (2)ன் கீழ் வழங்கப்படும் சான்றிதழ் இல்லாத நிலையில் மின்னணுப் பதிவில் உள்ள தகவலை ஆதாரத்தில் ஒன்றாகச் சேர்க்க இயலாது. மேலும், குறிப்பிட்ட காலகட்டத்தில் கணினிகளின் செயல்பாட்டோடு தொடர்புடைய உரிய சாட்சியிடம் விசாரணை நடத்தப்படாத நிலையில், அச்சுப்படிகள் எவ்வாறு எடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கிறபோது, பிரிவு 63ன் கீழ் தாக்கல் செய்யப்படுகிற இரண்டாம் நிலை ஆதாரம்கூட ஏற்கத்தக்கதல்ல என்று கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகிறார்.*
>
> மின்னணுப் பதிவுகள் ஏற்கப்படுவது தொடர்பான ஒரு சட்ட விதியாகிய பிரிவு 65*B*ன்படி மேற்கொள்ள வேண்டியவை ஒருபுறமிருந்தாலும், ஆதாரச் சட்டத்தின் பிரிவு 63, 65 போன்ற இதர பிரிவுகளின்கீழ் இரண்டாம் நிலை ஆதாரத்தைத் தாக்கல் செய்வதற்கு எவ்விதத் தடையுமில்லை. இந்தக் குறிப்பிட்ட வழக்கில் பிரிவு 65*B* துணைப்பிரிவு 4ன்படி சேர்க்கப்பட வேண்டிய விவரங்கள் சான்றிதழில் சேர்க்கப்படாமல் இருக்கலாம், ஆனால் பிரிவுகள் 63, 65 ஆகிய உரிய விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சூழல்களில் தரப்பட வேண்டிய ஆதாரங்களை சட்டம் அனுமதிக்கிறது என்றாலும், இரண்டாம் நிலை ஆதாரத்தைத் தாக்கல் செய்ய முடியாது என்பது இல்லை."

ஆயினும், அன்வர் பி.வி. எதிர் பி.கே. பஷீர் வழக்கில் (2014, 10 SCC 473), இப்படிப்பட்ட சந்தர்ப்ப சூழல் ஆதாரம் ஏற்கத்தக்கதல்ல என்று உச்சநீதிமன்றம் கூறியது. தலைமை

நீதிபதி ஆர்.எம்.லோதா, நீதிபதிகள் குரியன் ஜோசப், ரோஹின்டன் எஃப் நாரிமன் ஆகியோர் கொண்ட குழு அமர்வு, நாடாளுமன்றத் தாக்குதல் தொடர்பான தீர்ப்பை தள்ளுபடி செய்தது. அத்துடன் இந்திய ஆதாரச் சட்டம் 1872ன் பிரிவுகள் 63, 65, 65B ஆகியவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாக மறுவிளக்கம் அளித்தது. அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது வருமாறு:

*"இங்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்ட, மின்னணுப் பதிவு தொடர்பான ஆதாரம் ஒரு சிறப்பு விதியாக இருப்பதால், ஆதாரச் சட்டத்தின் பிரிவு 65 உடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய பிரிவு 63ன் கீழ் தாக்கல் செய்யப்படும் இரண்டாம் நிலை ஆதாரம் பற்றிய பொதுவான சட்டம் இதற்கு உட்பட்டதாகவே இருக்கும். மின்னணுப் பதிவுகளின் ஏற்புடைத்தன்மை தொடர்பான பிரிவுகள் 59, 65A ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள நீதிமன்றம் தவறியிருப்பது தெரிகிறது. அந்த வகையில், மின்னணுப் பதிவுகள் சார்ந்த இரண்டாம் நிலை ஆதாரத்தின் ஏற்புடைத்தன்மை குறித்த சட்டக் குறிப்பானது, நௌஜோத் சாந்து வழக்கில் இந்த நீதிமன்றம் கூறியதுபோல், சரியான சட்ட நிலைப்பாட்டை மேற்கொள்ளவில்லை. ஆகவே, அதனை தள்ளுபடி செய்யவேண்டியுள்ளது. நாங்களும் அதையே செய்கிறோம். பிரிவு 65Bன் கீழ் தரப்பட வேண்டிய தகவல்கள் திருப்திகரமாக இல்லையென்றால், இரண்டாம்நிலை ஆதாரமாக தாக்கல் செய்யப்படும் ஒரு மின்னணுப் பதிவு ஏற்கப்பட மாட்டாது."*

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட செல்போன்களின் அழைப்புகள் சம்பந்தப்பட்ட கணினிப் பதிவுகளின் அச்சுப்படிகளை பரிசீலிக்கிறபோது, குறிப்பிட்ட வழக்கில் பிரிவு 65Bயின் கீழ் தேவைப்படுகிற விவரங்கள் நிரப்பப்படவில்லை என்றாலும்கூட, பிரிவுகள் 63, 65 ஆகிய இதர பொருத்தமான விதிகளின்கீழ் அத்தகைய ஆதாரத்தை அளிக்க சட்டம் அனுமதிக்குமானால், அந்த ஆதாரத்தைச் சேர்க்கலாம் என்று உச்சநீதிமன்றம் கூறுகிறது. இது தவறான நிலைப்பாடு. ஆகவேதான், அன்வர் பி.வி. வழக்கில் அளித்த தீர்ப்பில் உச்சநீதிமன்றம் அதனைத் திருத்தியது. ஆனால், இப்போது மிகவும் காலதாமதமாகி விட்டது. அப்சல் குரு தூக்கிலிடப்படுவதற்கு முன்பு இந்தத் தீர்ப்பு வந்திருக்குமானால், அவருடைய வாழ்க்கை வேறுமாதிரியாக அமைந்திருக்கும். அவர் தூக்கிலிடப்பட்டிருக்கமாட்டார். ஏனெனில், ஏற்கவியலாத ஆதாரங்களின் அடிப்படையில்தான் நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் முடிவெடுக்கப்பட்டது என்று கூறிய நீதிமன்றம், அந்த வகையில் அந்த முடிவைத் தள்ளுபடி செய்தது. ஆக, தீர்ப்பில் ஒரு சட்டநுணுக்கத் தவறு இருந்திருக்கிறது.

### தேசியவாதப் பிரச்சனை

மரண தண்டனை பற்றிய விவாதங்கள் என வருகிறபோது, குறிப்பாக நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் இந்த விவாதங்கள் வருகிறபோது, இப்பிரச்சனை குறித்து பேசப்படவில்லை. அநேகமாக தேசியவாத பிரச்சனை காரணமாக அது விடப்பட்டிருக்கக் கூடும். தேசிய இனம் என்பதைத் தாண்டி தேசியவாதத்தை முன் வைப்பது ஆபத்தானது. உச்சநீதிமன்றத்தின் மிகச் சிறந்த நீதிபதிகளில் ஒருவரான வி.ஆர். கிருஷ்ணய்யர் ஒருமுறை இவ்வாறு கூறினார்: "உச்சநீதிமன்றம் முடிவு செய்வது ஏன் இறுதியானதாக இருக்கிறது என்றால் அது தவறு செய்யாது என்பதால் அல்ல; அரசமைப்பு சாசனரீதியாக அது இறுதியானது என்பதாலும், கட்டமைப்புரீதியாக மிக உயர்ந்தது என்பதாலும் அது தவறாக இருப்பதில்லை." நீதித்துறையின் தவறிலாத்தன்மை என்ற கருத்தாக்கத்தை அவர் ஏற்கிறார் என்றபோதிலும், சட்டப்பூர்வமான ஒரு அறிவிப்பு எப்போதுமே குறிப்பிட்ட பிரச்சனையில் இறுதியாகத்தான் இருந்தாக வேண்டும் என்பதில்லை என்று அவர் வலியுறுத்தினார்.

நீதித்துறை தவறு செய்யக்கூடும். ஏனெனில், அதில் செயல்படுகிறவர்கள் மனிதர்கள்தான். அது தவறுகளுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆகவே, உச்சநீதிமன்றத்தின் முடிவுடன் கருத்து வேறுபாடு கொள்ளும் உரிமை சாதாரணக் குடிமக்களுக்கு உண்டு. இந்த உரிமையின் முக்கியத்துவம் நீதிபதி கன்னா, ஜபல்பூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர் வழக்கில் வெளிப்படுத்திய பின்வரும் கருத்து வேறுபாட்டில் பிரதிபலிக்கிறது:

*"கடைசிப் புகலிடமான நீதிமன்றத்தில் ஒரு கருத்து வேறுபாடு ஏற்படுவது என்பது எதிர்காலத்தில் அறிவார்ந்த முறையில் சட்டத்தை அடைகாப்பதற்கான ஒரு வேண்டுகோளேயாகும். பிற்காலத்தில் எடுக்கப்படுகிற ஒரு முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு தொடர்பாக நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என ஒரு நீதிபதி கருத்து வேறுபாடு கொண்ட ஒரு தவறை சரிப்படுத்தக் கூடும்."*

(கட்டுரையாளர் லக்னோ நகரில் உள்ள டாக்டர் மனோகர் லோஹியா தேசிய சட்டப் பல்கலைக்கழக மாணவர்)

**ஆதாரம்: எகனாமிக் & பொலிடிகல் வீக்லி 6 ஆகஸ்ட் 2016**

# உண்மைகளை எழுதினால் ஒழித்துக்கட்டப்படுவார்கள்

– கனய்யா பெலாரி

இந்தி நாளேடாகிய ‘ஹிந்துஸ்தான்’ இதழில் சிறப்புச் செய்தியாளர் ராஜ்தேவ் ரஞ்சன், தற்போது சிறையிலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ராஷ்டிரிய ஜனதாதளம் (ஆர்ஜேடி) கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினருமான முகமது ஷகாபுதீனின் தூண்டுதலால், சிவான் நகரில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது பத்திரிகையாளர் சமூகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கறாரான, நேர்மையான பத்திரிகையாளர் என்ற மதிப்பைப் பெற்றவர் ராஜ்தேவ் ரஞ்சன். இந்தத் தகுதிதான்அவரது உயிரைப் பறித்தது. 2016 மே 13 மாலையில், தனது அலுவலகப் பணியை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தவர் கொலை செய்யப்பட்டார்.

மார்ச் 8ஆம் தேதி ராஜ்தேவ் ரஞ்சன் எழுதி வெளியாகியிருந்த – புகைப்படங்களுடன் கூடிய – ஒரு செய்தியில் பீகார் மாநில நலத்துறை அமைச்சர் அப்துல் கஃபூர், மோசமான குற்றவாளியாக இருந்து அரசியல்வாதியாக மாறிய முகமது ஷகாபுதீனுடன், சிவான் சிறைச்சாலையின் கண்காணிப்பாளரின் அறையில் உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தது அம்பலமானது. ஷகாபுதீன் மீது 50க்கும் மேற்பட்ட குற்றவியல் வழக்குகள் உள்ளன. கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருப்பவர் அவர்.

இந்தச் செய்தி, ஆர்ஜேடி கட்சி ஒரு கூட்டாளியாக இருக்கிற நிதீஷ் குமார் அரசுக்கு ஒரு பெரிய சங்கடமாக வந்தது.. சிறைக் கண்காணிப்பாளர் இடைநீக்கம் செய்யப்பட்டார். சிறையில் குற்றவாளியின் நடவடிக்கைகளை கறாராகக் கண்காணிக்குமாறு மாவட்ட நிர்வாகத்துக்கு மாநில அரசு ஆணையிட்டது. ஷகாபுதீனின் எதிரிகள் உட்பட, மாவட்ட மக்கள் அவரைப் பொதுவாக “சாஹேப்” என்றே அழைக்கிறார்கள்.

“(செய்தி வெளியான) அதே நாளில் ராஜ்தேவ் ரஞ்சனை தீர்த்துக்கட்ட சாஹேப் முடிவு செய்தார். அவருடைய கட்டளைப்படி செயல்படக்கூடியவர்கள் சுமார் 60 பீகார், உத்தரப்பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த மாவட்டங்களில் உள்ளனர். அவர்களில் இருந்து மூன்று பேர் தேர்ந்தெடுத்து அவர்களிடம் ரஞ்சனைக் கொலை செய்யும் பொறுப்பை ஒப்படைத்தார் சாஹேப்” என்று கொலை விசாரணையோடு சம்பந்தப்பட்ட சிலர் ‘தெஹல்கா’ குழுவினரிடம் தெரிவித்தனர். பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டநேரத்தில் ஷகாபுதீன் சிறைக்குள் இருந்து, ரஞ்சன் கொலையாளி ஒருவரோடு 36 முறை மொபைல் போனில் பேசியதாகக் கூறப்படுகிறது.

கொலை நடந்த மறுநாள் உ.பி. மாநிலத்தின் குஷி நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சவானி சிங், கூர்மையாக இலக்கு நோக்கிச் சுடுவதில் வல்லவர். வழக்கை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம், “பத்திரிகையாளரைக் கொலை செய்யும் வேலையை ஓராண்டுக்கு முன் சாஹேப் எனக்கு அளித்தார். ஆனால் நான் மறுத்துவிட்டேன்,” என்று கூறியுள்ளார். ஆயினும், கைது செய்யப்பட்ட மற்றொரு கொலையாளி உபேந்திரா சிங் காவல் துறையினரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ரஞ்சனைக் கொலை செய்வதற்கான ஆணை தனக்கு சிவான் சிறையிலிருந்து வந்தது என கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது.

‘தெஹல்கா’ செய்தியாளர்களுடன் பேசிய ரஞ்சனின் மனைவி ஆஷா தேவி, “சுமார் 5 மாதங்களுக்கு முன் என் கணவர் என்னிடம் ஷகாபுதீன் ஆட்கள் ‘ஹிந்துஸ்தான்’ பத்திரிகை அலுவலகத்தை கொளுத்தப் போவதாக தனக்கு மிரட்டல்கள் வந்துள்ளதாகக் கூறினார்,” என்று தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓம் பிரகாஷ் யாதவ், அவருடைய ஊடக ஆலோசகர் ஸ்ரீகாந்த் பார்த்தியா கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை பற்றிய செய்தியை எழுதியவர் ராஜ்தேவ் ரஞ்சன்தான். அந்தச் செய்தியால் ஷகாபுதீன் எரிச்சலோடு இருந்தார் என்பது ஆஷா தேவியின் ஊகம். “பார்த்தியா கொலை பற்றி எழுதுவதை நிறுத்திக்கொள் என்று தன்னுடைய ஆட்கள் மூலமாக என் கணவருக்குத் தகவல் அனுப்பியிருந்தார்,” என்றார் ஆஷா தேவி.

ஒரு தற்செயலான நிகழ்வு என்னவெனில், ராஜ்தேவ் ரஞ்சன், முகமது ஷகாபுதீன் இருவரும் வகுப்புத் தோழர்கள். இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் பிறந்த மாவட்டத்தில்தான் ரஞ்சன் தனது செய்தியாளர் பணியை 10 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொண்டிருந்தார். தன்னைப் பற்றி எழுதினால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ரஞ்சனை ஷகாபுதீன் பலமுறை எச்சரித்திருந்ததாகக் கூறியிருந்தார். ஐக்கிய ஜனதாதளம் – பாஜக கூட்டணியின் பத்தாண்டு கால ஆட்சியில் ரஞ்சனின் உயிர் பாதுகாக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் ஷகாபுதீனின் குற்றவியல் நடவடிக்கைகள் நின்றுபோயிருந்தன.

2015 நவம்பரில் பீகார் மாநிலத்தின் அதிகாரக் கட்டமைப்பில் முக்கிய இடம் பிடித்தவராக லாலு பிரசாத் யாதவ் திரும்பிவந்தார். அதைத் தொடர்ந்து, சிறையில் இருந்த ஷகாபுதீன் தனது குற்றச் செயல்களுக்கு புதிய லைசென்ஸ் கிடைத்ததுபோல் செயல்படத் தொடங்கியது தெரியவருகிறது. பத்திரிகையாளர் கொலை சம்பந்தமாக மே 17ஆம் தேதி சிவான் சிறையில் காவல்துறையினர் சோதனை நடத்தியதே இதற்குச் சான்றளிக்கிறது. பாட்னா நகரில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் முதலமைச்சர் நிதீஷ் குமார் பொதுமக்களைச் சந்திப்பதுண்டு. 'ஜனதா தர்பார்' என்ற அதே போன்ற நிகழ்ச்சியை சிறைக்குள் ஷகாபுதீனும் நடத்திக் கொண்டிருந்தார். மே 17அன்று மதியம் மாவட்ட ஆட்சியரும் காவல்துறைக் கண்காணிப்பாளரும் சிறைக்கு திடீர் சோதனைக்காக வந்தபோது ஷகாபுதீன் அப்படியொரு கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார். 63 பேர் அவரைச் சூழ்ந்திருந்தார்கள். தங்களுடைய குறைகளை சாஹேப் தீர்த்துவைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரையும் பிடித்துவைத்த காவல்துறையினர், விசாரணைக்குப் பிறகு விடுவித்தனர். அவர்களிடமிருந்து 28 செல்போன்களை காவல்துறையினர் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட சிம் கார்டுகள் ஐக்கிய அரபுக் குடியரசில் வழங்கப்பட்டதற்கான அடையாளத்துடன் இருந்தது. எந்த அளவுக்கு நிழலுலக ஆட்களுடன் ஷகாபுதீன் தொடர்பு வைத்திருந்தார் என்பதை அது காட்டியது.

ஆறு பத்திரிகையாளர்களைத் தீர்த்துக் கட்டுவதற்கு ஷகாபுதீன் திட்டமிருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்களில் இரண்டாவதாக பலியானவர்தான் ரஞ்சன். 2003ல் உளவுத்துறையினர் தயாரித்த 256 பக்க அறிக்கையில், பாட்னா நகரைச் சேர்ந்த பத்திரிகையாளர் குணால் குமார் முன்பு ஷகாபுதீன் தூண்டுதலால் சுலேமான் என்பவரால் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அப்போது 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையின் அரசியல் பிரிவு ஆசிரியராக இருந்த சுரேந்திரா கிஷோர் இந்தக் கொலைக் கும்பலின் பட்டியலில் இடம் பெற்றிருந்ததாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. "அப்போது நாங்கள் கிஷோருக்கு பாதுகாப்பு அளித்தோம்," என்று காவல்துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். 'தெஹல்கா' பத்திரிகையின் நிறுவனர்கள் தருண் தேஜ்பால், அனிருத்தா பால் ஆகியோரை தீர்த்துக்கட்ட ஷகாபுதீன் சதித்திட்டம் தீட்டியிருந்ததாகவும், அடல் பிஹாரி வாஜ்பாய் அரசை கவிழ்க்கும் நோக்கத்துடன் அந்த சதித்திட்டம் தீட்டப்பட்டது என்றும் உளவுத்துறை அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது.

லாலு பிரசாத்தின் 15 ஆண்டுகால ஆட்சியில், சிவான் நகரில் ஷகாபுதீன் ஊடகங்களை தனது நோக்கத்திற்கேற்ப ஆடவைத்துக்கொண்டிருந்தார். 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' தலைமைச் செய்தியாளர் கிருஷ்ண குமார் சிங், 'டெய்னிக் ஜக்ராம்' பத்திரிகையின் சிறப்புச் செய்தியாளர் சுபாஷ் பாண்டே ஆகியோரை மோசமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என தொலைபேசி மூலம் ஷகாபுதீன் மிரட்டினார். அந்த இரண்டு மூத்த பத்திரிகையாளரும் மாதக் கணக்கில் தூக்கமின்றி இரவுகளைக் கழித்தனர். இறுதியில் ஷகாபுதீன் மீது அந்த இருவரும் புகார் செய்வதில்லை, அவர்களுக்கு ஷகாபுதீன் எந்தத் தீங்கையும் செய்வதில்லை என்று மேலிடத்தவர்கள் சமரசம் செய்து வைத்தார்கள்.

ராஜ்தேவ் ரஞ்சன் கொலையை முதலமைச்சர் நிதீஷ் குமார் ஆழ்ந்த கவலையோடு எடுத்துக்கொண்டார். "பத்திரிகை மீதான தாக்குதல் என்பது என் மீதான தாக்குதல்தான்," என்று அவர் கூறினார். பத்திரிகையாளரின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறிய அவர், கொலை வழக்கு விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைத்தார். அதன் மூலம், சிபிஐ விசாரணை கோரிய எதிர்க்கட்சித் தலைவர்களின் வாயை மூடினார். உண்மையில் காவல்துறையினர் வழக்கு விசாரணையின் இறுதிக் கட்டத்திற்கு வந்திருந்தனர். ஆனால், ஆர்ஜேடி கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரான ஷகாபுதீன் மீது கை வைப்பது லாலு பிரசாத்தை ஆத்திரமடையச் செய்யும் என்று அஞ்சினர்.

'ஹிந்துஸ்தான்' செய்தியாளர் படுகொலை செய்யப்பட்டதற்கு முதல்நாள்தான் ஜார்கண்ட் மாநிலத்தின் 'டாஸா' என்ற இந்தி தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் இந்திரதேவ் யாதவ் என்ற அகிலேஷ் பிரசாத் சிங் சத்ரா நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். காவல்துறையினர் சந்தேகத்துக்குரிய ஒருவரை பிடித்துவைத்தனர். அந்த நபர் சிமாரியா தொகுதி பாஜக எம்எல்ஏ கணேஷ் கூஞ்ஜூ என்பவரின் உள்ளூர் பிரதிநிதி. கொலைக்கான காரணத்தை வெளிப்படுத்துமாறு சிபிஐ (மாவோயிஸ்ட்) கட்சியிலிருந்து பிரிந்து வந்த த்ருதியா ப்ரஸ்துதி கமிட்டி (டிபிசி) என்ற அமைப்பு கோரியுள்ளது என்று சத்ரா காவல்துறைக் கண்காணிப்பாளர் அஞ்ஜானி ஜா தெரிவித்தார்.

24 மணி நேர இடைவெளியில் இரண்டு பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டது உலக அளவில் ஊடகவியலாளர்கள் இடையே எதிர்ப்பலையைக் கிளப்பியது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் தெருக்களில் இறங்கி, குறிப்பாக தங்களது இரண்டு சகாக்கள் கொல்லப்பட்டதை எதிர்த்தும், பொதுவாக அதிகரித்து வரும் இத்தகைய தாக்குதல்களை எதிர்த்தும், ஆத்திரமூட்டல்களை எதிர்த்தும் தங்களது ஆவேசத்தை வெளிப்படுத்தினர். பத்திரிகையாளர் அமைப்புகளின்

பிரதிநிதிக் குழுக்கள் பீகார் முதலமைச்சரை சந்தித்து கோரிக்கை மனுக்களை அளித்தனர். ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை பிரதானமாக இடம் பெற்றது.

"ஊரகப் பகுதிகளில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் பீகார் ஆளுநர் ராம் நாத் கோவிந்திடம் அளித்துள்ளோம்," என்று பீகார் உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்க துணைத் தலைவர் மிருத்தஞ்ஜய் மானி கூறினார். இந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் மே 19 அன்று ஆளுநரைச் சந்தித்தனர். உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அரசு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர். பத்திரிகையாளர்களுக்கான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமொன்றைக் கொண்டுவருவதாக மாநில அரசு உறுதியளித்துள்ளது. ஆண்டுக்கொருமுறை ரூ. 1,760 ப்ரீமியம் செலுத்தி வந்தால் ரூ.5 லட்சம் வரையில் மருத்துவ செலவுக்கான ஈட்டுத் தொகை கிடைக்கும்.

"ராஜ்தேவ் ரஞ்சன் கொலை ஒரு தனி விவகாரம்" என்று மூத்த பத்திரிகையாளர் சுரேந்திரா கிஷோர் கூறுகிறார். டாக்டர் ஜகநாத் மிஸ்ரா, லாலு பிரசாத் யாதவ் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் பத்திரிகையாளர்களது நிலைமை மிக மோசமாக இருந்தது என்கிறார் அவர். "பத்திரிகையாளர்களின் வாயை மூட வைப்பதற்காக பத்திரிகைச் சட்டம் என்ற ஒரு கருப்புச் சட்டத்தையே கொண்டு வந்தார் மிஸ்ரா. லாலு பிரசாத் சட்டமன்றத்துக்கு உள்ளேயே கூட பத்திரிகையாளர்களைப் பற்றி இழிவான முறையில் பேசினார்," என்று கிஷோர் கூறுகிறார்.

1960ஆம் ஆண்டுகளில்கூட சில முதலமைச்சர்கள் தங்களோடு ஒத்துவராத பத்திரிகையாளர்களுக்குக் கடுமையான பாடம் கற்பிக்குமாறு தங்களுடைய ஆதரவாளர்களுக்குக் கட்டளையிட்டனர் என்று கிஷோர் மேலும் கூறுகிறார். "முதலமைச்சர் ஸ்ரீ கிருஷ்ணா சிங் ஆதரவாளர்களால் 'சர்ச்லைட்' பத்திரிகையின் அன்றைய ஆசிரியர் எம்எஸ்எம் சர்மா கொடூரமான முறையில் தாக்கப்பட்டார். அதேபோல் பத்திரிகையின் மற்றொரு ஆசிரியர் டிஜேஎஸ் ஜார்ஜ், முதலமைச்சர் கேபி சஹாய் கட்டளையின்படி கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்," என அவர் நினைவுகூர்கிறார். மாநிலத்தின் அந்த முன்னணி ஆங்கிலப் பத்திரிகையின் அரசு நிர்வாகத்துக்கெதிரான செய்திகளும் கருத்துகளும் வந்ததை அந்த இரண்டு முதலமைச்சர்களாலும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பத்திரிகையாளர்களுக்கான முதியோர் ஒய்வூதியத் திட்டமொன்றைக் கொண்டு வந்த முதல் மாநிலம் பீகாராகத்தான் இருக்கும். பத்திரிகையாளர்களுக்கு மாதம் ரூ. 5,000, அவர்கள் காலமாகிவிட்டால் மனைவியருக்கு மாதம் ரூ.2,000 என அந்த ஒய்வூதியம் வழங்கப்படும். "தொலைதூரப் பகுதிகளில் உள்ள செய்தியாளர்கள் கடுமையான நிலைமைகளில் எவ்விதப் பாதுகாப்புமின்றி பணிபுரிகிறார்கள். அவர்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கான ஏற்பாடு குறித்து நான் தீவிரமாக பரிசீலித்து வருகிறேன்," முதலமைச்சர் நிதீஷ் குமார் கூறுகிறார். இது குறித்து 'தெஹல்கா' செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், "பத்திரிகையாளர்களிடம் தவறாக நடந்துகொள்பவர்கள் மன நலம் குன்றியவர்களே என்பது எனது சொந்தக் கருத்து," என்றார்.

கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்குவது குறித்து 'ஹிந்துஸ்தான்' நிர்வாகம் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்று, அப்பத்திரிகையின் பாட்னா பதிப்பு ஆசிரியர் திர் விஜய் சிங் கூறினார். ரஞ்சனின் நினைவஞ்சலி சடங்குகள் முடிந்த பிறகு அந்த உதவிகள் குறித்து அறிவிக்கப்படும். "எங்களுடைய ஒப்பந்த செய்தியாளர்களாக தொலைவுப் பகுதிகளில் பணிபுரிவோரின் பிரச்சனைகளை எங்களது நிர்வாகம் எப்போதுமே பரிவோடு கண்காணித்து வருகிறது," என்று அவர்.

ஆனால் இதை சுரேந்திரா கிருஷ்ணா மறுக்கிறார். "அநேகமாக எல்லா பத்திரிகையாளர்களுக்குமே, குறிப்பாக வட்டார செய்தியாளர்களுக்கு, அவர்களது கடுமையான உழைப்பிற்கு மிகச் சொற்பமாகவே ஊதியம் வழங்கப்படுகிறது. தங்களது வாழ்க்கை செலவுகளை ஈடுகட்ட விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்," என்கிறார் அவர். பெரும்பாலான வட்டார பதிப்பு ஆசிரியர்கள், தங்களுடைய நிர்வாகங்களை திருப்திப்படுத்துவதற்காக பரிதாபத்துக்குரிய செய்தியாளர்களுக்கான செலவுகளை வெட்டுவதற்குத் தயங்குவதில்லை என்கிறார் அவர்.

## தலைநகர வட்டாரப் பத்திரிகையாளர்களும் பாதுகாப்பாக இல்லை

இத்தகைய பின்னணியில்தான் ஃபரிதாபாத் பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் பூஜா திவாரி (28) பிரச்சனையையும் நாம் காண வேண்டியுள்ளது. DNA ஊடக நிறுவனத்தின் டிஜிட்டல் பதிப்புப் பிரிவில் வேலை செய்தவர் அவர். அதற்கு முன் வேறொரு செய்திப் பத்திரிகையில் பணியாற்றி வந்தார். ஒரு போலி மருத்துவரை மாறுவேடத்தில் சென்று பேட்டி கண்டு (Sting Operation) அவர் எழுதிய செய்தி கடந்த ஏப்ரல் 1ஆம் தேதியன்று அந்த டிஜிட்டல் தளத்தில் "நான் உள்ளே இருக்கிறேன்" என்ற தலைப்பில் வெளியானது. சட்ட விரோதமாகக் கருக்கலைப்பு அறுவை சிகிச்சை செய்து வந்தவர் அந்த போலி மருத்துவர். செய்தி வெளியான ஒரு வாரம் கழித்து அந்தச் செய்தியில்

குறிப்பிடப்பட்டிருந்த மற்றொரு நபர் பூஜா மீது எஃப்ஐஆர் பதிவு செய்தார். 2 லட்சம் ரூபாய் கொடுத்தால் அந்தச் செய்தியில் இருந்து அவர் பெயரை நீக்கிவிடுவதாக பூஜா பேரம் பேசினார் என்று அந்தப் புகாரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ஊடக நிறுவனத்திலிருந்து அவர் இடை நீக்கம் செய்யப்பட்டார். வலைத் தளத்தில் அந்தச் செய்தி நீக்கப்பட்டது. ஒரு மாதம் கழித்து அவர் தற்கொலை செய்துகொண்டார்.

பூஜாவின் மரணம் இப்போதும் மர்மமாகவே இருக்கிறது. தனது நண்பர் ஒருவருக்கு பூஜா அனுப்பியிருந்த மின்னஞ்சலில், தான் லஞ்சம் கேட்கவில்லை என்று குறிப்பிட்டிருந்ததாக ஊடகச் செய்திகள் கூறுகின்றன. தனி மனித இழிவுப் பிரச்சாரத்திற்கு அவர் இரையாகி விட்டார் என்று அந்தச் செய்திகள் கூறுகின்றன. தன்னைப் பற்றிய அவதூறுப் பிரச்சாரம் ஊடகங்களில் வைரலாகப் பரவியுள்ளது என்றும், முகநூலில் இருந்து தனது புகைப்படம் தன்னுடைய அனுமதியின்றியே எடுத்துப் பயன்படுத்தப்பட்டது என்றும் பூஜா கூறியிருந்தார்.

பூஜா பற்றிய செய்தி சமூக வலைத்தளங்களில் விரிவாகப் பரவியதுதான் அவரது தற்கொலைக்குக் காரணமா? அல்லது எந்த நிறுவனத்திற்காக அந்த மாறுவேட நடவடிக்கையில் ஈடுபட்டாரோ அந்த நிறுவனம் தனக்கு ஆதரவாக வரவில்லை என்பதால் மனமுடைந்தாரா?

அவரது மரணம் குறித்த கூடுதல் ஆதாரங்கள் காவல்துறை புலன்விசாரணை மூலம் கிடைக்கிற வரையில் இந்த வழக்கு புதிராகவே நீடிக்கும். அவர் பணம் கேட்டு மிரட்டவில்லை என்றால், ஊடகத்துறையினர் ஒரு தைரியமான பத்திரிகையாளரை, மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்த இருந்தவரை இழந்துவிட்டார்கள் என்றே பொருள்.

### மோசமான முன்னணியில் உ.பி. மாநிலம்

பத்திரிகையாளர்களுக்கு எதிரான வன்முறைகளைப் பொறுத்தவரையில் முன்னணியில் இருப்பது பீகார் அல்ல, உத்தரபிரதேச மாநிலம்தான். ஒரு அமைச்சர் ஒரு பத்திரிகையாளரை உயிரோடு கொளுத்துவதற்கு தனது அடியாட்களை அனுப்பவில்லை, மாறாக ஒரு போலீஸ் அதிகாரியையே அனுப்பினார் என்று தெரியவருகிறது! இது எவ்வளவு கடுமையான கண்டனத்துக்குரியது.

நாடு முழுவதும் ஊடகவியலாளர்கள் மீது மொத்தம் 114 கடுமையான தாக்குதல்கள் நடந்தன, அதில் 63 தாக்குதல்கள் நடந்தது உ.பி. மாநிலத்தில் என்று நாடாளுமன்ற மக்களவையில் தெரிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் இத்தகைய தாக்குதல்களிலேயே மிக அதிகமான தாக்குதல்கள் அந்த மாநிலத்தில்தான் நடந்துள்ளன. இத்தகைய தாக்குதல்களுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் நம்பிக்கையளிப்பதாக இல்லை. 63 தாக்குதல்கள் நடந்திருந்தும் கைது செய்யப்பட்டவர்கள் என்னவோ 4 பேர் மட்டுமே. இந்த மாநிலத்தில் ஊடகங்களுக்கு வேண்டிய பாதுகாப்பு இல்லை என்பதற்கு இதுவே சான்று.

### பத்திரிகையாளர் எரித்துக் கொல்லப்பட்ட, மிகவும் அச்சமூட்டும் மேற்படி வழக்கின் விபரம் வருமாறு:

ஷாஜஹான்பூர் பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜெகேந்திரா சிங். 2015 ஜூன் 1 அன்று சில போலீஸ்காரர்களால் அவர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார். மாநில அமைச்சர் ஒருவர்தான் அதற்கு ஆணையிட்டவர் என்று கூறப்படுகிறது. நாடு முழுவதும் பத்திரிகையாளர்கள் இதற்குத் தங்களது கண்டனைத்தையும் கோபத்தையும் தெரிவித்தனர். பல செய்தியேடுகளில் பணியாற்றியவர் ஜெகேந்திரா. தனது கறாரான அணுகுமுறைகள் காரணமாக அந்த நிறுவனங்களில் இருந்து பலமுறை வெளியேற்றப்பட்டவர். முகநூலில் அவர் 'ஷாஜஹான்பூர் சமாச்சார்' என்ற பக்கத்தைத் தொடங்கினார். தனது வட்டாரத்தில் நிகழும் பல்வேறு முறைகேடுகள் குறித்து அதில் தொடர்ந்து பதிவு செய்துவந்தார். பொது விநியோகத் துறையில், பெரும் ஊழல் நிலவுவதையும், சட்ட விரோதமாக பட்டப்பகலிலேயே கனிமச் சுரங்கங்கள் இயங்குவதையும், சட்டத்துக்குப் புறம்பாக கைப்பற்றப்பட்ட நிலங்களில் பங்களாக்கள் கட்டப்படுவதையும், விநோபா ஆசிரமத்தில் இருந்தவர்கள் கடத்தப்பட்டதையும், பாலியல் வன்முறைக்கு உள்ளானவருக்கு வந்த மிரட்டல்களையும் பற்றி அவர் அதில் எழுதினார். இத்தககைய குற்றங்களில் ஒரு அமைச்சருக்கும் அவர் அடியாட்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும் அவர் பதிவு செய்தார்.

ஒருமுறை அவரைக் கொலை செய்ய முயற்சி நடந்தபோது, ஒரு கால் உடைந்ததோடு அவர் தப்பித்துவிட்டார். அந்தத் தாக்குதலுக்குக் காரணமான அமைச்சரின் பெயரையும், சம்பந்தப்பட்ட மற்றவர்களின் பெயர்களையும் அவர் வெளிப்படுத்தினார். அச்சுறுத்தல்களுக்குக் கலங்காமல் தன் பணியைத் தொடர்ந்தபோது அவர் மீது ஒரு கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கின் பெயரில் அவருடைய வீட்டை ஜூன் 1 அன்று போலீசார் சோதனை செய்தனர். பின்னர் ஜெகேந்திரா உள்ளூர் மருத்துவமனை ஒன்றில் தீக்காயங்களுடன் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து லக்னோ மருத்துவமனைக்குப் மாற்றப்பட்டார். வீட்டில் சோதனை செய்வதற்காக வந்த போலீஸ்காரர்களைப் பார்த்ததும் தன் மீது பெட்ரோல் ஊற்றித் தீ வைத்துக்கொண்டார் என்று காவல்துறையினர் கூறுகிறார்கள்.

ஆதாரம் தெஹல்கா, 15 ஜூன் 2016

# பொதுக் குடிமைச் சட்டம் தேவையா? அதற்கு இது நேரமல்ல!

– கே. கண்ணன்

அனைவருக்குமான பொதுக்குடிமைச் சட்டத்தைக் கொண்டு வர முடியுமா என்று பரிசீலிக்குமாறு சட்ட ஆணையத்தை மத்தியச் சட்ட அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இது தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும் என்ற கருத்து விவாதங்களில் முன் வைக்கப்படுகிறது. அரசியல் சாசனத்தின் சட்டக்கூறு 44–ல் உள்ள அரசின் கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறை இத்தகைய முயற்சிக்கு இடமளிக்கிறது.

பொதுக் குடிமைச் சட்டம் தற்போது கொண்டுவரப்பட்டால் என்ன ஆகும்? உண்மையில் அது இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களுக்கான தனிநபர் சட்டங்களின்மீது இந்துக்களுக்கான சட்டங்கள் மேலாதிக்கம் செலுத்துவதற்கான முயற்சியாகத்தான் தற்போது பார்க்கப்படும்.

டாக்டர் அம்பேத்கர் அரசியல் சாசனத்தை வரையும்போது தனிநபர் சட்டங்களில் மதத்துக்கான பாத்திரம் எதுவும் இல்லை என்ற விவாதத்தை நடத்த முயன்றார்.

திருமணம், ஜீவனாம்சம், வாரிசுரிமை, குழந்தைகளைத் தத்தெடுப்பது, பாதுகாவலராக இருப்பது உட்பட பிறப்பு முதல் இறப்பு வரை நாம் எதிர்கொள்பவை தொடர்பானவைதான் தனிநபர் சட்டங்கள். மதம் என்பது பிறப்பில் தொடங்கினாலும் அது ஒருவரின் மனஉணர்வால் சட்டங்களின் மூலம் பின்பற்றப்படுகிறது. அதை நாம் ஒருவரின் தனிப்பட்ட விஷயமாக அங்கீகரிக்கிறோம்.

நாம் தனிநபர் சட்டங்களைப் பலவந்தமாக ரத்து செய்தால், ஒருவரின் தனிப்பட்ட, மிகவும் அந்தரங்கமான உணர்வுகளில் மோதுவதாக இருக்கும். மற்ற நாடுகள் வேறுபட்ட தனிநபர் சட்டங்களை வைத்திருக்கவில்லையே, நாம் ஏன் வைக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது. அதற்கு மாறாக, இத்தனை தனிநபர் சட்டங்கள் இருந்தாலும், அவை தேசிய ஒருமைப்பாட்டைக் கெடுக்கிறதா என்றும் நாம் கேட்கலாம்.

பொதுக் குடிமைச் சட்டம் பற்றிய எந்த ஒரு பேச்சும் சரியான நேரத்தில் சரியான பாதையில் வர வேண்டும். எந்த ஒரு தனிநபர் சட்டமும் முழுமையானதல்ல. வலுக்கட்டாயமான ஒரு சட்டத்தின் மூலம் சாதிக்க முடியாததை நாம் மதச்சார்பற்ற சட்டங்கள் மூலம் மெதுவாகச் சாதித்தே வருகிறோம்.

உதாரணமாக, தத்தெடுப்பதற்கான பொதுவான ஒரு சட்டத்தைச் சில வருடங்களுக்கு முன்னால் நாம் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தோம். கடும் எதிர்ப்புகளால் அது கைவிடப்பட்டது. ஒரு விஷயத்தில் சட்ட மாறுதல்களுக்கு அனுமதித்தால் மற்ற விஷயங்களுக்கும் அது பரவிவிடும் என்று இஸ்லாமியச் சமூகம் கவலைப்படுகிறது. அவர்களை நாம் பலவந்தப்படுத்துவதுதான் எதிர்ப்புக்கான காரணம். இது போன்ற நேரங்களில் கிறிஸ்தவர்களிடமிருந்தும் எதிர்ப்பு வரவே செய்கிறது.

மும்பை மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்கள் 'சிறார் நீதி சட்ட'த்தின் கீழ் தத்தெடுக்கும்போது அந்தச் சட்டம் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று அறிவித்துவிட்டன. அதன் தொடர்ச்சியாக உச்ச நீதிமன்றமும் இந்தச் சட்டத்தின்படி இஸ்லாமியர்களும் தத்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டது. என்ன ஆச்சரியம்! எந்தச் சமூகத்திடமிருந்தும் எந்தவொரு எதிர்ப்பும் வரவில்லை.

இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான குழந்தைக்கான பாதுகாவலர் சட்டங்கள் தந்தைக்குச் சாதகமாக உள்ளன. சிறுவயது குழந்தைக்குத் தந்தைதான் இயல்பான பாதுகாவலர் என்கின்றன அவை. ஆனால், கீதா ஹரிகரன் வழக்கு உட்பட நீதிமன்றத் தீர்ப்புகள் குழந்தையின் எதிர்காலமே முக்கியமென்றும் எவ்வயதிலும் ஐந்து அல்லது ஏழு வயதுக்கு மேலான குழந்தைகளாக இருந்தாலும் அம்மாதான் எல்லொருக்கும் மேலான பாதுகாவலராக இருக்க முடியும் என்கின்றன.

விவாகரத்து வழக்கிலும் மனைவிக்கான ஜீவானாம்சம் வழங்குவது பற்றிய விவகாரத்திலும் சட்டம் செயல்படுவதில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன. 'தலாக்' சொல்லி விவாகரத்தான ஒரு இஸ்லாமியப் பெண்ணுக்கு அவள் வேறொரு ஆணை மணப்பதற்கான காலம் வரை அவளுக்கான 'ஜீவானாம்சம்' வழங்கப்படலாம் என்ற வரையறை உள்ளது. அந்தச் சட்டங்களும் நீதிமன்றத்தின் விளக்கங்களுக்கு ஏற்ப பெரிய அளவில் மாறிக்கொண்டு வருகின்றன.

### தந்தைக்குத் தனித்தனி நியாயம்

இஸ்லாமியச் சட்டப்படி விவாகரத்தான இஸ்லாமியப் பெண் அடுத்த திருமணத்துக்காக அவள் காத்திருப்பதற்கான 'இத்தாத்' எனும் காலகட்டத்துக்கு மட்டுமே ஜீவானாம்சம்

பெற முடியும். அதே போல் தலாக் சொல்வதன் மூலம் இஸ்லாமியப் பெண்கள் கணவர்களால் சுலபமாக விவாகரத்து செய்யப்படுகிறார்கள். அது அவர்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சம். ஆனால், நீதிமன்றத் தீர்ப்புகளின் படி இந்த நிலை பெருமளவு மாற்றப் பட்டுள்ளது. அதனால், தற்போது விவாகரத்தான இஸ்லாமியப் பெண்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அல்லது அடுத்த திருமணம் வரையிலும் ஜீவனாம்சம் பெற இயலும்.

## வாரிசுரிமைக்கான சட்டம்

இந்துச் சட்டத்தின்படி அம்மா நேரடி வாரிசுகளில் ஒருவராவார். ஒரு ஆண் இறந்தால் அவருடைய மனைவி, குழந்தைகள், அம்மா ஆகியோரே நேரடி வாரிசுகள். அங்கே தந்தைக்கு எந்த இடமும் இல்லை.

கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தக்கூடிய இந்திய வாரிசுரிமைச் சட்டப்படி நேரடி வாரிசுகள் இல்லாதபட்சத்தில், கணவனை இழந்த மனைவியோடு சேர்ந்து தந்தையும் ஒரு வாரிசு. ஒரு சட்டத்தில் தந்தைக்கு நியாயம் வழங்குவதாகவும் இன்னொன்றில் நியாயம் வழங்காமலும் சட்டம் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா ?

இஸ்லாமியச் சட்டத்தைப் பாருங்கள். தந்தையும் தாயும் முதன்மையான வாரிசுகள். 1956 வரையிலும் வாரிசு என்ற முறையில் ஒரு சொத்தின் மீது முழுமையான உரிமையைப் பெண்ணுக்குத் தருவதற்கு இந்துக்கள் ஒப்புக் கொள்ளவில்லை. சட்டப்பிரிவு 14 தான் அதை வழங்கியது. ஆனால், இதுதான் அதிகமாகத் தவறான முறையில் பயன்படுத்தப்படும் சட்டப் பிரிவு.

இந்துக் குடும்பத்தின் ஆண்கள் வாய்மொழியாகத் தங்களுக்குள்ளாகவே பாகம் பிரித்துக்கொண்டு பெண்களுக்குப் பாகம் அளிக்காமல் இந்தச் சட்டத்தை எளிதாக மீறுகிறார்கள். இதனால்தான் அதிகமான சட்டத் தகராறுகள் ஏற்பட்டுள்ளன. பெண்ணுக்குச் சொத்தின்மீது சம உரிமை கொடுப்பதற்கு மனமில்லாத இந்து ஆணாதிக்கம்தான் காரணம்.

நவீன மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்குச் சொத்துரிமைகள் வழங்குவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே முகமது நபியின் காலத்திலேயே இஸ்லாமியச் சட்டம் பெண்களுக்கு முழுமையான சொத்துரிமை வழங்கியுள்ளது.

உயில் மூலமான வாரிசுரிமைக்கான சட்டத்தைப் பார்ப்போம். நீதிமன்றத்தில் பெரும்பாலான வழக்குகள் கணவனை இழந்த மனைவி மற்றும் மகள்கள் இருந்தாலும் மகன்களுக்கு மட்டுமே சொத்துரிமை அளிக்கப்பட்டதன் உள்ளக் குமுறலால் எழுந்தவையே. உயில் மூலம் எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் சொத்துரிமை மாற்றம் செய்வதே பிரச்சினைகளுக்கு காரணமாகும். மூன்றில் ஒரு பாகத்துக்கு மேல் தானமாக வெளியாட்களுக்குத் தருவதற்கு இயல்பான வாரிசுகளின் சம்மதம் தேவை என்கிறது இஸ்லாமியச் சட்டம். அதுவும் மூன்றில் இரண்டு பாகம்தான் அதிகபட்சம் என்கிறது.

இஸ்லாமியச் சட்டம் சொல்வது போலவே இந்திய வாரிசுரிமைச் சட்டத்தையும் மாற்றிவிடுவோம் என்று நினைத்துக்கொள்வோம். என்னவாகும் ?

சட்டத் தகராறுகள் குறையும். ஒரு நல்ல பங்கீடாகவும் அது இருக்கும். ஆனால், நல்லதை அங்கீகரிப்பதற்குப் பதிலாக, சிறுபான்மையோரைத் தாஜா செய்கிறார்கள் என்ற முணுமுணுப்புகளைத்தான் கேட்போம்.

## படிப்படியாகத்தான் மாற்றம்

இந்து மற்றும் கிறிஸ்தவ சமூகங்களில் திருமணம் ஒரு புனிதமான பந்தம் என்று கருதப்படுகிறது. அவற்றைவிட திருமணம் ஒரு ஒப்பந்தம் என்று சொல்கிற இஸ்லாமியச் சட்டத்தில், கூடுதலான மதச்சார்பின்மை உள்ளது. இந்து திருமணச் சட்டத்திலும் விவாகரத்துச் சட்டத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ‘இருவரும் சம்மதித்த விவாகரத்து’ பற்றிய சட்டப் பிரிவுகள் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தக்கூடியவை. அவை உண்மையில் திருமணங்களைப் பற்றிய இஸ்லாமியப் புரிதலை நோக்கிய நகர்வுதான்.

ஒரு இஸ்லாமியர் நான்கு மனைவிகளை மணந்துகொள்ளலாம் என்பதை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறீர்களா ? திருமணப் பந்தங்களுக்கு வெளியேயான பாலியல் உறவுகள் மனமொப்பியவையாக இருந்தாலும் அவற்றை நாம் சட்டவிரோதமாக்கியுள்ளோம். சட்டத்துக்குப் புறம்பாகத் திருமணம் செய்துகொள்வதையும் குற்றங்களாக அறிவித்துள்ளோம். ஆனால், இச்சட்டங்களை நாம் மீறாமல் உள்ளோமா ?

பல்வேறுவகையான சிவில் சட்டங்களிலிருந்து ஒரு பொதுத்தன்மைக்குச் சட்டங்களின் மூலமாகச் செல்கிற சமூக மாற்றத்தின் வளர்ச்சிப்போக்கு ஒரு நாளில் நடந்துவிடாது. படிப்படியாகத்தான் நடக்கும்.

சுதந்திரமான முன்முயற்சிகள் மூலம் நாம் ஒவ்வொரு தனிநபர் சட்டத்தையும் சீர்திருத்துவோம். ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்குச் சீரான தன்மையோடு இருக்கும் சட்டங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

(கே. கண்ணன், பஞ்சாப், அரியானா நீதிமன்றங்களில் பணியாற்றிய முன்னாள் நீதிபதி, தமிழில்: த. நீதிராஜன்)

# ஏற்கெனவே தாமதித்துவிட்டோம்!

**– எம்.வெங்கய்ய நாயுடு**

சனி சிங்கணாப்பூர், திரயம்பகேஸ்வரர் ஆலயங்களில் பெண்களும் வழிபடலாம் என்று தீவிர போராட்டங்களுக்குப் பிறகு, முற்போக்காக முடிவெடுத்திருப்பது பாராட்டத்தக்கது. இது பாலினச் சமத்துவத்துக்கான நீண்ட பயணத்தில் நல்லதொரு முடிவு. மத சம்பிரதாயங்களில் பெண்களைப் பாரபட்சமாக நடத்தக் கூடாது என்ற விவாதம் தேசிய அளவில் நடந்திருக்கிறது. நாடு சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகு எத்தனையோ துறைகளில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக நடைபோடத் தொடங்கிய பிறகும் மத சம்பிரதாயங்களில் பின்னுக்குத் தள்ளப்படுவது கவலையளிக்கிறது.

கோவா மாநிலத்தில் அமலில் இருக்கும் 'கோவா குடும்ப சட்ட'த்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதை நாம் நாடு முழுவதற்குமே விரிவுபடுத்தலாம். போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கத்திலிருந்து கோவா விடுதலை பெற்ற பிறகும்கூட 1867–ல் இயற்றப்பட்ட 'போர்ச்சுகீசிய சிவில் கோடு' அமலில் இருந்தது.

முற்போக்கான அச்சட்டமானது குடும்பத்தின் வருமானத்தையும் சொத்துகளையும் ஆண், பெண் வேறுபாடின்றி கணவன், மனைவி, குழந்தைகள் என்று அனைவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்க வழிசெய்கிறது. தாத்ரா–நாகர் ஹவேலி, டாமன் – டையூ ஆகிய பகுதிகளிலும் இது அமலில் இருக்கிறது.

## பொதுக் குடிமைச் சட்டத்தின் முக்கியத்துவம்

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எல்லா தனி நபர்களின் உரிமைகளைக் காக்கவும் பொதுக் குடிமைச் சட்டம் இப்போதைய தேவை. அச்சட்டம் பெண்களைப் பாரபட்சமாக நடத்துவதைத் தடுப்பதுடன், நாட்டின் மதச்சார்பின்மை கொள்கைக்கும் வலு சேர்த்து ஒற்றுமையை ஓங்கச் செய்யும். ஆனால், அத்தகைய பொதுக் குடிமைச் சட்டத்தை எல்லா மதத்தவர்களும் அதன் சாதக – பாதகங்கள் தொடர்பாக ஆற அமர விவாதித்து, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் அளவுக்குக் கருத்தொற்றுமை ஏற்பட்ட பிறகுதான் கொண்டுவர வேண்டும். எந்த ஒரு சீர்திருத்தச் சட்டமும் மக்களால் ஏற்கப்படாமல் திணிக்கப்படுவது நல்ல பலனைத் தராது. பொதுக் குடிமைச் சட்டம் தொடர்பாக மக்களில் பலருடைய மனங்களில் எழும் சந்தேகங்களுக்கும் அச்சங்களுக்கும் நல்ல பதிலை அளித்த பிறகுதான் அதைச் சாத்தியப்படுத்த முடியும். இந்தியப் பகுதி முழுவதற்கும் பொதுக் குடிமைச் சட்டத்தை அமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தின் 44–வது பிரிவு வலியுறுத்துகிறது. அரசியல் சட்ட நிர்ணய சபையில் இது தொடர்பாக நடந்த விவாதத்தில் பேசிய டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், பொதுக் குடிமைச் சட்டத்தின் தேவையை வலியுறுத்தினார். அதே சமயம், அதை அனைத்துத் தரப்பினரும் விரும்பி ஏற்ற பிறகே அமல்செய்ய வேண்டும் என்றார்.

"மக்களுடைய வாழ்க்கை முழுவதற்குமான விஷயங்களில் மதத்துக்கு ஏன் இத்தனை இடம் கொடுக்க வேண்டும், மதத்தின் பிடியைத் தளர்த்த ஏன் சட்டமியற்றக் கூடாது? செயற்கையான ஏற்றத் தாழ்வுகள், பாரபட்சமான அணுகுமுறைகள் என்று நம்முடைய அடிப்படை உரிமைகளுக்கு முரணாக நிலவும் இந்த சமூக அமைப்பைச் சீர்திருத்த முடியாவிட்டால் நமக்கெதற்குச் சுதந்திரம்?" என்று அவர் கேட்டார். எந்த மதம், சாதி, இனம் சார்ந்தவர்களானாலும் பொது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மணவிலக்கு, வாரிசுரிமை போன்றவற்றில் தனிச் சட்டங்கள் மட்டுமே செல்லுபடியாகிறது.

## நீதித் துறையின் நினைகூட்டல்கள்

விவாகரத்து செய்த கணவரிடமிருந்து தனக்கு ஜீவனாம்சம் பெற்றுத்தர வேண்டும் என்று குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவின் கீழ் வழக்கு தொடர்ந்தார் ஷா பானு. உச்ச நீதிமன்றம் 1985–ல் அளித்த தீர்ப்பில் அவருடைய கோரிக்கையை ஏற்று கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெறத் தகுதி உண்டு என்று தீர்ப்பளித்தது. அப்போதைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியான ஒய்.வி. சந்திரசூட், பொதுக் குடிமைச் சட்டம் இருந்தால் சட்டப்படியான சில வேற்றுமைகள் களையப்பட்டு, நாட்டின் ஒருமைப்பாடு வலுப்பெறும் என்று சுட்டிக்காட்டினார். பொதுக் குடிமைச் சட்டம் இயற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் அப்போது ஆணையிட்டது.

2003–ல் ஜான் வல்லமாட்டம் எதிர் இந்திய அரசு வழக்கிலும் தலைமை நீதிபதி வி.என். கரே இதே கருத்தைத்தான் எதிரொலித்தார்.

"அரசியல் சட்டத்தின் 44–வது பிரிவு இன்னமும் அமல்படுத்தப்படாமல் இருப்பது வருத்தத்துக்குரியது. பொதுக் குடிமைச் சட்டத்தை இயற்றும் முயற்சியில் நாடாளுமன்றம் இன்னமும் ஈடுபடாமல் இருக்கிறது" என்றார். ஏகப்பட்ட தனிச் சட்டங்கள் இருப்பதால்தான் இத்தனைக் குழப்பமும், பொதுக் குடிமைச் சட்டம் கொண்டுவர அரசு விருப்பமாக இருக்கிறதா என்று 2015 அக்டோபரில்கூட உச்சநீதிமன்றம் கேட்டது.

### மனதில் ஒரு மதச்சார்பற்ற திட்டம்

பொதுக் குடிமைச் சட்டத்துக்கு எதிராக வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் வாதங்களை முன்வைத்தனர். அவற்றில் முக்கியமானது, "பிரிட்டிஷ்காரர்கள்கூட இத்தகைய முயற்சியில் ஈடுபடவில்லை. அப்படிச் செய்வது மத விவகாரங்களில் – அதிலும் சிறுபான்மைச் சமூகத்தவரின் விவகாரங்களில் அரசு தலையிடுவதாகிவிடும்" என்றனர். இதைவிட உண்மைக்கு மாறான ஒரு கூற்று இருக்க முடியாது.

ஒருவர் கட்டுப்பெட்டியாக மதம் சார்ந்த கருத்தில் ஆழ்ந்திருப்பதே சரி, அதை மாற்றக் கூடாது என்றால், புதிய சட்டங்கள் எதற்கு, அவ்வப்போது அவற்றில் திருத்தங்களும் எதற்கு ? சமூகம் வளர்ச்சி அடையும்போது மாறும் சமுதாயச் சூழலுக்கு ஏற்ப அனைத்து மக்களின் நலன் கருதி சட்டங்களைப் புதிதாக அது இயற்றுகிறது, பழைய சட்டங்களில் மாறுதல்களைச் செய்கிறது.

பொதுக் குடிமைச் சட்டம் என்றாலே தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் பிரச்சாரம்தான் மேற்கொள்ளப்படுகிறது. பொதுக் குடிமைச் சட்டம் ஏன் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் மதக் கருத்துகளுக்கு எதிராகவோ, பழக்க வழக்கங்களுக்கு எதிராகவோதான் இருக்கும் என்று ஏன் நினைக்க வேண்டும் ? சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சட்ட அடிப்படைகளில்தான் பொதுக் குடிமைச் சட்டங்கள் இருக்க முடியும். சிறுபான்மைச் சமூக மக்கள் உள்பட அனைவரின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில்தான் சட்டமியற்ற முடியும். மத அடிப்படையில் யாரும் ஒடுக்கப்படாமல் தடுப்பதற்குத்தான் பொதுக் குடிமைச் சட்டம் பயன்படும்.

### பாரதிய முஸ்லிம் மகிளா அந்தோலன்

பாரதிய முஸ்லிம் மகிளா அந்தோலன் அமைப்பை நிறுவிய நூர்ஜஹான் சஃபியா நியாஸ், ஜகியா சோமன் என்ற இருவரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு 2015 நவம்பரில் கூட்டாக ஒரு கடிதம் எழுதினர். "1985 ஷா பானு வழக்கு முதல் இன்றுவரை, இந்நாட்டின் விநோத அரசியல் சூழல் காரணமாக முஸ்லிம் மகளிர் தங்களுடைய வாழ்க்கை நிலை குறித்து என்ன நினைக்கிறார்கள் என்று யாராலும் கேட்கப்படவேயில்லை.

முஸ்லிம் தனிச்சட்டத்தில் திருத்தம் செய்ய முடியாமல் கட்டுப்பெட்டியான, ஆணாதிக்க மனப்பான்மை நிறைந்த சிலர் முட்டுக்கட்டை போட்டே வருகின்றனர். இதன் விளைவாக, முஸ்லிம் மகளிர் என்ற வகையில் திருக்குர்ஆன் அளிக்கும் உரிமைகளையும், இந்தியக் குடிமகள் என்ற வகையில் இந்திய அரசியல் சட்டம் அளிக்கும் உரிமைகளையும் பெற முடியாமல் முஸ்லிம் பெண்கள் தடுக்கப்படுகின்றனர்.

திருமணம், குடும்ப விவகாரங்கள் தொடர்பாக, முஸ்லிம் பெண்களுக்குச் சாதகமாக மொராக்கோ, துனீசியா, துருக்கி, எகிப்து, ஜோர்டான், வங்கதேசம், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் சட்டங்கள் தொகுக்கப்பட்டும் சீரமைக்கப்பட்டும் அமலில் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை முஸ்லிம் நாடுகள். இந்தியப் பெண்களுக்கு இவை மறுக்கப்படுகின்றன.

இதனால், இந்தியச் சமூகத்தில் வாய்மொழியாக 'தலாக்' என்று மும்முறை கூறி எளிதில் மணமுறிவை ஏற்படுத்திவருகின்றனர். பலதார மணமுறையும் வழக்கத்தில் இருக்கிறது. நாட்டில் 10 மாநிலங்களில் 4,710 முஸ்லிம் பெண்களிடம் கருத்தறிந்தோம். அவர்களில் 92.1% பேர் வாய்மொழியாக, மூன்று முறை தலாக் கூறி ஒரு தலைபட்சமாக மணவிலக்கு பெறுவதைத் தடுக்க வேண்டும் என்றனர். 91.7% பேர் பலதார மணத்தைத் தடை செய்ய வேண்டும் என்றனர். முஸ்லிம்களின் குடும்பச் சட்டத்தைப் புதிதாகத் தொகுப்பது நீதி கிடைக்க உதவும் என்று 83.3% மகளிர் கருத்துத் தெரிவித்தனர்" என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

### சகிப்புத்தன்மை

ஷா பானு முதல் சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தில் பொதுநலன் கோரும் மனு தாக்கல் செய்த சயாரா பானு வரை வலியுறுத்துவதெல்லாம் ஆண் – பெண் பாகுபாடின்றி தனிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதே. மாறிவரும் சூழலில் அனைவருக்கும் பொதுக் குடிமைச் சட்டம் அவசியம் தேவைப்படுகிறது. அதன் மூலம்தான் மதச்சார்பின்மையை வலுப்படுத்த முடியும்.

(வெங்கய்ய நாயுடு, நகர்ப்புற வளர்ச்சி, செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர், தமிழில்–சாரி)

**ஆதாரம்: தி இந்து (தமிழ்), 11 செப்டம்பர் 2016**

# மாற்றுப் பாலினத்தவருக்கு ஒரு மண் இல்லையா?

–அனுவிந்தா பி., திருச்சி சிவா

*மாற்றுப் பாலினத்தவர் உரிமைகள் சட்ட முன்வரைவு–2014 நாடாளுமன்ற மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால், இன்று வரையில் அவர்களது வாழ்க்கையின் மீதும் சுயமரியாதையின் மீதும் தொடுக்கப்படும் தாக்குதல்கள் உறுத்தலின்றித் தொடர்கின்றன. மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வரைவை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சியில் அரசு ஈடுபடுகிறது. இது ஆட்சியாளர்களுக்கு அரசு உறுதியில்லை என்பதைக் காட்டுகிறது. இதன்மூலம், நீண்டகாலமாக துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு பகுதி மக்களைப் பார்க்கத் தயாராக இல்லாமல் கண்கள் மூடிக்கொள்ளப்படுகின்றன.*

மாற்றுப் பாலினத்தவர் உரிமைகள் சட்ட முன்வரைவு–2014, நாடாளுமன்ற மாநிலங்களவையில், ஒரு தனிநபர் முன்வரைவாக கொண்டுவரப்பட்டது. 2015 ஏப்ரல் 24 அன்று அது, ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட வரலாற்று சிறப்பைப் பெற்றது. இவ்வாறு அது நிறைவேறியது சிந்திக்கக்கூடிய இந்தியர்களுக்கு இரண்டு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. முதலில், கடந்த 46 ஆண்டுகளில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட ஒரே தனிநபர் சட்ட முன்வரைவு இதுதான். இந்த சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட்டதற்கான காரணங்களும், இதர தனிநபர் சட்ட முன்வரைவுகள் நிறைவேற்றப் படாததற்கான காரணங்களும் ஆழ்ந்த ஆய்வுக்குரியவை. ஆயினும், நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரில், மக்களவையில் இதன் நிலைமை என்ன ஆகும் என்பதைக் காண நாடு காத்திருக்கிற நிலையில், இந்தச் சட்ட முன்வரைவின் உள்ளடக்கம் குறித்து– அதாவது மாற்றுப் பாலினத்தவரின் உரிமைகள் குறித்து – நாம் கூர்ந்து நோக்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்தச் சட்ட முன்வரைவு எவ்வாறு உருவானது, எவ்வாறு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது, அதன் எதிர்காலம் எப்படி நிச்சயமற்றதாக இருக்கிறது என்பதெல்லாமே இந்த மக்களின் உரிமைகள் என்ற முக்கியமான பிரச்சனையில் மத்திய அரசின் அக்கறையின்மையை அப்பட்டமாகப் பிரதிபலிக்கின்றன.

மாநிலங்களவையில் இது நிறைவேறும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், இவ்வளவு நிச்சயமாக எதிர்பார்க்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இவ்வளவு நிச்சயமாக எதிர்பார்க்கப்படவில்லை என்பது, கடந்த 46ஆண்டுகளில் பல தனிநபர் சட்ட முன்வரைவுகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் தோல்வியையே சந்தித்துள்ளன என்ற வரலாற்றைப் பார்த்தால், வியப்பளிப்பதாக இல்லை. நம்முடைய கட்டமைப்பில் நிலைபெற்றிருக்கிற பல்வேறு அம்சங்களை மாநிலங்களவையின் முடிவு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த சட்ட முன்வரைவுக்கு கட்சி வேறுபாடு இன்றி உறுப்பினர்கள் ஆதரவளித்தார்கள். அதற்குப் பின்புலமாக இருந்தது அரசாங்கத்தின் உறுதி அல்ல, மாறாக நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள மாற்றுப் பாலின மக்களின் எதிர்பார்ப்புகளும், வேண்டுகோள்களும்தான். தெருக்களில் இறங்கி அவர்கள் போராடி வந்திருக்கிறார்கள். ஆனால், அரசாங்கத்தின் கண்களுக்கு மட்டும் அது புலப்படவில்லை.

### மாற்றுப்பாலினத்தவர் யார் ?

ஒருவரது பாலின உணர்வு, அவர் பிறக்கும்போது இருந்த பாலின அடையாளத்துடன் ஒத்துப்போகாதவர்தான் மாற்றுப்பாலினத்தவர். பாலின அடையாளம் என்பது ஒவ்வொருவரின் ஆழ்ந்த உள்ளுணர்வு சார்ந்த தனிப்பட்ட பாலின அனுபவத்தோடு கூடியதாகும். அது அவரது பிறப்பின்போது இருந்த பாலின அடையாளத்துடன் ஒத்துப்போகலாம் அல்லது ஒத்துப்போகாமலும் இருக்கலாம். பாலின உறுப்புகளின் வளர்ச்சி மூளையின் பாலியல் வளர்ச்சி ஆகியவை ஒரே பாலினத்தன்மையோடு ஒத்துப்போகாதபோது பெண்கள் ஆணின் மூளையோடு இருப்பது, அதேபோல் ஆண்கள் பெண்ணின் மூளையோடு இருப்பது என்பது நிகழ்கிறது. ஆயினும், பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்மைகளோடு பொருந்தாத நிலை குறித்த அச்சம், அரசும் சமுதாயமும் வெளிப்படுத்துகிற வெறுப்பு ஆகியவை காரணமாக மாற்றுப் பாலினச் சமூகத்தினர் இந்தியச் சமுதாயத்தில் மிக மிக ஒதுக்கப்பட்ட, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினராகிறார்கள். மனிதர்களாகவேகூட அவர்கள் மதிக்கப்படுவதில்லை.

விளிம்புநிலை வாழ்க்கைதான் அவர்களுக்கு வாய்க்கிறது. இவர்களது இந்த அவல நிலையை உச்சநீதிமன்றம் புரிந்துகொண்டது. தேசிய சட்டச் சேவைகள் ஆணையம் (*NALSA*) எதிர் இந்திய அரசு மற்றும் இதரர் வழக்கில் 2015 ஏப்ரல் 15ஆம் தேதி அளித்த தீர்ப்பு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மாற்றுப் பாலினத்தவர் தங்களை ஆண் என்றோ பெண் என்றோ மூன்றாம் பாலினத்தவர் என்றோ அடையாளப்படுத்திக்கொள்வதற்கு உரிமை உண்டு என உச்சநீதிமன்றம் அறிவித்தது. அவர்களது அந்த சுய அடையாளத்துக்கு மத்திய – மாநில அரசுகள் சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கூறியது. காலங்காலமாக புறக்கணிக்கணிக்கப்பட்டு வந்துள்ள அந்த சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட வேறு பல சட்ட அறிவிப்புகளையும் உச்சநீதிமன்றம் வெளியிட்டது. மேலும், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம் அமைத்த 'மாற்றுப் பாலினத்தவர் பிரச்சனைகள் தொடர்பான வல்லுநர் குழு' அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அந்த சட்ட அறிவிப்புகளை பரிசீலிக்குமாறும் மத்திய– மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. ஆறு மாத கால அளவிற்குள் அவற்றைச் செயல்படுத்துமாறும் கூறியது.

### அரசின் அலட்சியம்

ஆனால், உச்சநீதிமன்றம் நிர்ணயித்த ஆறு மாத காலக் கெடு முடிந்துவிட்ட பிறகும், மத்திய அரசு இது தொடர்பாக எதுவுமே செய்யவில்லை. மாற்றுப் பாலினத்தவர் மீது அரசாங்கம் வழக்குத் தொடுப்பது, சமுதாயம் அவர்களைப் பாகுபடுத்தி நடத்துவது ஆகியவை தங்குதடையின்றித் தொடர்கின்றன. உச்சநீதிமன்றத்தின் ஆணைகூட செயல்படுத்தப்படுவதில்லை என்பதையே இது காட்டுகிறது. ஒரு விபத்தில் சிக்கிய மாற்றுப் பாலினத்தவர்களை மருத்துவமனையின் ஆண்கள் பிரிவில் சேர்ப்பதா, பெண்கள் பிரிவில் சேர்ப்பதா என்பதை மருத்துவர்களால் முடிவு செய்ய முடியாமல் போனதால், அந்த மாற்றுப் பாலினத்தவர்கள் இறந்து போனார்கள். உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் இவ்வாறு நடந்திருக்கிறது. காவல்துறையினர் மாற்றுப் பாலினத்தவரை மோசமான முறையில் நடத்துகிறார்கள் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் 2015ல் வெளியிட்ட ஒரு அறிக்கை பல்வேறு விவரங்களுடன் தெரிவிக்கிறது. 2015 பிப்ரவரியில் தெலங்கானா ஹிஜ்ரா மாற்றுப் பாலினத்தவர் அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கை, அதற்கு முந்தைய ஆறு மாத காலத்தில் மாற்றுப் பாலினத்தவர் மீது 40 தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதைத் தெரிவிக்கிறது. இந்த உண்மை நிலவரம் ஒரு அவசரத் தலையீட்டைக் கோருகிறது என்பதால்தான் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான தேவை ஏற்பட்டது. திருச்சி சிவா தாக்கல் செய்த சட்ட முன்வரைவுக்கு அதுவே உந்துசக்தியாக அமைந்தது.

### தனிநபர் சட்ட முன்வரைவு

தேசிய மாற்றுப்பாலினத்தவர் ஆணையம் அமைப்பதற்கான சட்ட முன்வரைவாகவே இது தொடங்கியது. ஆயினும் விரைவில் அதற்கு வேறு பெயர் சூட்டப்பட்டது. மாற்றுப் பாலினத்தவரின் வாழ்க்கை சம்பந்தமான ஒரு விரிவான தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கும், செயல்படுத்துவதற்கும் வழிவகுக்கிற சட்ட முன்வரைவாக அது உருவெடுத்தது. மாற்றுப் பாலினத்தவரின் கல்வி, திறன் வளர்ப்பு, வேலை வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, மருத்துவ கவனிப்பு ஆகிய உரிமைகள் குறித்து அந்த சட்ட முன்வரைவில் இடம் பெற்றுள்ளன. ஆனால் அத்தோடு நின்று விடவில்லை. அவர்களுக்கான சட்ட உதவி, நிதியுதவி, ஏற்கத்தக்க குடியிருப்பு வசதி, அத்துமீறல்களிலிருந்தும் வன்முறையிலிருந்தும் சுரண்டப்படுவதில் இருந்தும் பாதுகாப்பு, மறுவாழ்வு, சமூக அரவணைப்பு, சமூக ஏற்பு ஆகிய அம்சங்களும் சட்ட முன்வரைவில் இடம்பெற்றன.

### மாற்றுப் பாலினத்தவர் சட்ட முன்வரைவு –2014

நாடாளுமன்ற மாநிலங்களவையில் 2014 டிசம்பர் 10 அன்று தாக்கல் செய்யப்பட்டது. 2015 பிப்ரவரி 27, மார்ச் 8 ஆகிய தேதிகளில் அதன் மீது விவாதம் நடைபெற்றது. ஒரு தனிநபர் சட்ட முன்வரைவின் மீது இவ்வளவு உற்சாகத்துடன் விவாதம் நடைபெற்றது முன்னெப்போதும் நடந்திராததாகும். மாநிலங்களவை உறுப்பினர்கள் கட்சி வேறுபாடின்றி அதை ஆதரித்தார்கள், விரிவான முறையில் விவாதித்தார்கள், அது நிறைவேறுவதற்கு ஒத்துழைத்தார்கள். அந்த விவாதம் வழக்கத்தை மீறுவதாக அமைந்தது. முன்னெப்போதும் நடந்திராத வகையில் ஒரு தனிநபர் சட்ட முன்வரைவு மாநிலங்களவையில் நிறைவேறியது. மாநிலங்களவை சபாநாயகர் இவ்வாறு கூறினார்: "இது ஒரு ஏகமனதான முடிவு. இது ஒரு நல்ல நிகழ்வு, அரிதான நிகழ்வு."

### ஏமாற்று வேலையா ?

மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த சட்ட முன்வரைவு மக்களவைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்த ஆண்டின் மழைக்காலக் கூட்டத்தொடர், குளிர்காலக் கூட்டத்தொடர் இரண்டிலுமே, தனிநபர் சட்ட முன்வரைவு வரிசையில் அது இரண்டாவது இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த இரண்டு கூட்டத்தொடர்களிலுமே அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. பட்டியலில் இந்த சட்ட முன்வரைவுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த மற்றொரு தனிநபர் சட்ட முன்வரைவின்மீது நடந்த விவாதத்தின் காரணமாக இந்தத் தாமதம் ஏற்பட்டது. 9 மணி

நேரத்துக்கும் மேலாக அதன் மீது விவாதம் நடைபெற்றது. ஒரு தனிநபர் சட்ட முன்வரைவுக்கு பொதுவாக ஒதுக்கப்படுவதை விட அதற்கு 5 மடங்கு நேரம் ஒதுக்கப்பட்டது. இவ்வாறு "திட்டமிட்ட முறையில்" செய்யப்பட்ட தாமதத்தின் நோக்கம் 2015 டிசம்பர் 26 அன்று தெளிவானது. அப்போது மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகத்தின் வலைத்தளத்தில் 'மாற்றுப் பாலினத்தவர் உரிமைகள் சட்ட முன்வரைவு–2015' என்ற சட்ட முன்வரைவு வெளியிடப்பட்டிருந்தது. ஏற்கனவே (மாநிலங்களவையில்) தாக்கல் செய்யப்பட்ட சட்ட முன்வரைவுக்குத் தரப்பட்டிருந்த அதே பெயர்தான் இதற்கும் தரப்பட்டிருந்தது. ஆனால், அதில் இருந்த முக்கிய அம்சங்கள் இதில் நீர்த்துப்போயிருந்தன. இவ்வாறு பல்வேறு முக்கிய அம்சங்கள் பலவீனப்படுத்தப்பட்டு, வெறும் 11 பக்கங்கள் கொண்ட ஆவணமாக, மாற்றுப்பாலினத்தவர் சமூகத்தை அவமதிப்பதாக மாற்றப்பட்டிருந்தது. மாற்றுப் பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்ட முன்வரைவு – 2016 இப்பிரச்சனையில் அரசின் அறியாமையையே காட்டுகிறது. ஒருவேளை இது நிறைவேற்றப்படுமானால், கடந்த பல ஆண்டுகளாக மாற்றுப் பாலின சமூகத்தினர் தங்களது சுயமரியாதைக்காக நடத்திய போராட்டத்தால் கிடைத்த அனைத்துப் பலன்களையும் தள்ளுபடி செய்வதாகவே இருக்கும்.

முதலாவதாக, மாற்றுப் பாலினத்தவர் என்பதற்கு அரசாங்கம் தனது சட்ட முன்வரைவில் அளித்துள்ள விளக்கம் அவர்களைத் தாழ்த்துவதாகவும், அறிவியல்பூர்வமாக தவறான விளக்கமாகவும் இருக்கிறது. ஒரு பகுதி ஆண், ஒரு பகுதி பெண் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. முழுமையற்ற இரட்டைப் பாலினத்தன்மை என்பதாகவும் விளக்கமளிக்கப் பட்டுள்ளது. இந்த விளக்கம் உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பிலிருந்தும், மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவிலிருந்தும் மத்திய அரசே அமைத்த வல்லுநர் குழுவின் பரிந்துரையிலிருந்தும் வெகுவாக முரண்படுகிறது.

அரசாங்கம் தயாரித்துள்ள சட்ட முன்வரைவில் தரப்பட்டுள்ள விளக்கம், மாற்றுப் பாலினத்தவர் குறித்து திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு வந்துள்ள, அவர்களுக்குப் பாதகமான கருத்துகளையே மீண்டும் சொல்வதாக இருக்கிறது. மாறுபட்ட பாலின வெளிப்பாடுகள் குறித்து சமுதாயத்திற்கு சகிப்பின்மையின் பிரதிபலிப்புகள் தான் அந்தக் கருத்துகள். மேலும், இருபாலின அடையாளமுள்ள மக்களையும், மாற்றுப்பாலின மக்களையும் இது ஒரே பிரிவின் கீழ் வைக்கிறது. பாலின உணர்வு என்பதைப் பாலியல் உணர்வோடு சேர்த்துக் குழப்புகிறது. மாற்றுப் பாலினத்தவருக்கு மாவட்ட பரிசீலனைக்குழு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு கூறுகிறது. இது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசமைப்பு சாசன உத்தரவாதத்திற்கு எதிரானதாகும். தங்களது பாலின அடையாளத்தை முடிவு செய்கிற உரிமை மாற்றுப் பாலினத்தவருக்கு உண்டு, அவர்கள் தங்களை ஆண் என்றோ பெண் என்றோ மூன்றாம் பாலினம் என்றோ எப்படி அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பினாலும் அதற்கு மத்திய–மாநில அரசுகள் சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று நால்சா வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் இது மீறுகிறது.

பாலின அடையாளத்திற்கான சொந்த முடிவை மறுப்பது என்பது மனித கௌரவத்தின் அடிப்படையையே தாக்குவதாக இருக்கிறது. அத்துடன், மாற்றுப் பாலினத்தவருக்கான சட்டங்களைக் கொண்டு வருவதில் உலக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகளைக் காணாமல் கண் மூடிக்கொள்கிறது. அயர்லாந்து, அர்ஜென்டினா, மால்டா, கொலம்பியா, டென்மார்க் ஆகிய நாடுகளில் மாற்றுப் பாலின மக்கள் தங்களது பாலினத்தை, எவ்வித மருத்துவ சிகிச்சையோ, சான்றிதழோ இல்லாமல் தாங்களே தீர்மானித்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. ஆகவே, மாற்றுப் பாலினத்தவர் தங்களது பாலின அடையாளத்தை ஆணாகவோ, பெண்ணாகவோ, மூன்றாம் பாலினமாகவோ அனைத்து அடையாள ஆவணங்களிலும், அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒரு உறுதிப்பத்திரத்தை இணைப்பதன் மூலம் மாற்றிக்கொள்வதற்கு சட்டப்பூர்வமாக வழி செய்து தரப்பட வேண்டும். எந்த சமூகத்திற்கு நாம் அதிகாரம் வழங்க எண்ணுகிறோமோ அந்தச் சமூகம் வலியுறுத்துகிற கோரிக்கை இது.

(தனிநபர் சட்ட முன்வரைவில்) மாற்றுப் பாலினத்தவரின் சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சுயேச்சையான கண்காணிப்பு ஏற்பாடாக, தேசிய அளவிலும், மாநில அளவிலும் மாற்றுப் பாலினத்தவர் நல ஆணையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மத்திய அரசின் சட்ட முன்வரைவில் இந்த சட்டக்கூறு நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு தனது கடமைப் பொறுப்பிலிருந்து நழுவுகிறது. அரசாங்கத்தின் சட்ட முன்வரைவில் மாற்றுப் பாலினத்தவருக்கான தேசிய மன்றம் ஒன்று அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. முடிவுகளைச் செயல்படுத்தும் அதிகாரம் இல்லாத, வெறும் அதிகாரிகளின் கட்டமைப்பாக மட்டுமே அந்த மன்றம் இருக்கும். மாற்றுப் பாலின மக்கள் பாகுபடுத்தப்பட்டால் அல்லது துன்புறுத்தப்பட்டால் அதுகுறித்துப் புகார் செய்வதற்கு யாரை அணுக வேண்டும் என்பதிலும் அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு தெளிவாக இல்லை.

மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வரைவில், மாற்றுப் பாலினத்தவருக்கு கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கம் இப்போது தாக்கல் செய்துள்ள சட்ட முன்வரைவில் இந்த இடஒதுக்கீடு விலக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்பது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் உள்ள ஆணையாகும். இதனையும் அரசாங்கம் மீறியுள்ளது. மாற்றுப் பாலினத்தவராக உள்ள இளம் பருவத்தினர் பலர் பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்திக் கொள்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் சந்திக்கிற கேலிகளும், துன்புறுத்தல்களும்தான்.

ஆனால், பள்ளி நிர்வாகங்கள் இவர்கள் பாதியில் வெளியேறுவதை நல்லது என்றே எடுத்துக்கொள்கின்றனர். தங்களுக்கு எதிரான வெறுப்பு நிறைந்துள்ள சமுதாயத்தில் மாற்றுப் பாலிலனத்தவர் கல்வி பெற வேண்டுமென்றால் அதற்கான சிறப்பு சட்ட ஏற்பாடுகள் தேவையென்பது தெளிவு. மாற்றுப் பாலினத்தவருக்கு 2 சதவீத இட ஒதுக்கீடு என்பது முக்கியமானது மட்டுமல்ல, நடைமுறை சாத்தியமானதும் கூட. இட ஒதுக்கீட்டிற்கு உச்சநீதிமன்றம் ஏற்கனவே நிர்ணயித்துள்ள 50 சதவீத உச்சவரம்பையும் இது மீறாது. ஏனென்றால், தனிநபர் சட்ட முன்வரைவில் கூறப்பட்டுள்ள 2 சதவீத இடஒதுக்கீடு என்பது அனைத்து சாதிகளையும் சேர்ந்த மாற்றுப் பாலினத்தவருக்கு பலனளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. தற்போது 1995ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகள் சட்டத்தில் உள்ள இடஒதுக்கீடு போன்றதுதான் இது.

அரசாங்கத்தின் சட்ட முன்வரைவில் 13(1) பிரிவு, மாற்றுப் பாலினத்தவர் யாரும் தங்கள் பெற்றோரிடமிருந்து அல்லது உடனடிக் குடும்பத்திடமிருந்து பிரிந்து செல்வதற்கு அனுமதிக்கவில்லை. இது மாற்றுப் பாலினத்தவர்கள் யாரையும் சார்ந்திராமல் சுயேச்சையாக வாழ்வதற்கு அல்லது தங்களை ஏற்றுக்கொண்ட குடும்பத்துடன் வாழ்வதற்கு உள்ள உரிமையை நிராகரிக்கிறது. மாற்றுப் பாலினத்தவர்கள் தங்களது ரத்த உறவுக் குடும்பத்திலேயே வன்முறைகளைச் சந்திக்கிறார்கள் என்ற உண்மையை அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு காணத் தவறுகிறது. அரசாங்க சட்ட முன்வரைவின் 19(a) பிரிவு, மாற்றுப் பாலினத்தவரை பிச்சை எடுப்பதில் ஈடுபடுத்துவது குற்றம் எனக் கூறுகிறது. சட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பில் உள்ளவர்கள் இந்த விதியைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. மேலும், காவல்துறையினர் இவர்களைத் தாக்குவதும், பாலியல் அத்துமீறல்களுக்கு உட்படுத்துவதும் தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. காவல்துறையின் இத்தகைய வன்முறையிலிருந்து மாற்றுப் பாலினத்தவரைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடு எதுவும் அரசாங்க சட்ட முன்வரைவில் இல்லை. இவ்வாறாக, அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு ஒரு பக்கம் தவறான ஆட்களைக் குறிவைத்ததாக இருக்கிறது, இன்னொரு பக்கம் ஏற்கனவே மாற்றுப் பாலினத்தவருக்கு கிடைத்துக் கொண்டிருக்கக்கூடிய ஓரளவு சமூகப் பாதுகாப்பையும் ஒழித்துக்கட்டுகிறது. இவர்களது திருமண உரிமை, வாரிசு உரிமை, தத்தெடுக்கும் உரிமை ஆகியவை உள்ளிட்ட பல முக்கியப் பிரச்சனைகளை அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு கண்டுகொள்ளவில்லை.

அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு ஜனநாயகப்பூர்வமற்ற முறையில் அக்கறையின்றி தயாரிக்கப்பட்டிருக்கிறது. கலந்தாலோசனைக் கூட்டங்களுக்கும், கருத்துத் தெரிவிப்பதற்கும் தரப்பட்டுள்ள கால அவகாசம் போதுமானதல்ல. முதலில், சம்பந்தப்பட்டவர்கள் கருத்துக்கூற 10 நாட்கள் மட்டுமே அவகாசம் தரப்பட்டது. ஒரு சில மாதங்களுக்காவது இந்தக் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று மாற்றுப் பாலினத்தவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அரசாங்கம் அதற்குப் பிறகும் கூடுதலாக 10 நாட்கள் மட்டுமே அவகாசம் அளித்தது. மாற்றுப் பாலினத்தவர் அமைப்புகள் பல்வேறு கருத்துகளைக் கூட்டாகச் சேர்ந்து அனுப்பியுள்ளன. அந்த விரிவான கருத்துகளை அரசாங்கம் முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டது.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட அமைச்சகங்களுக்கு இடையேயான கலந்தாய்வு நடைமுறைகளில், இந்த சட்ட முன்வரைவைத் தயாரிப்பதற்குப் பொறுப்பான சமூக நீதி அமைச்சகத்தைத் தவிர்த்து வேறு எந்த அமைச்சகமுமே தங்களுடைய கருத்துகளை அனுப்பவில்லை. மாற்றுப் பாலினத்தவர் உரிமைகளுக்கான ஒரு பயனுள்ள சட்டத்தைச் செயல்படுத்துவது என்பதில் அரை டஜனுக்கும் மேற்பட்ட அமைச்சகங்கள் சம்பந்தப்படுகின்றன. இருந்தபோதிலும், அமைச்சகங்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கவில்லை என்பது எந்த அளவிற்கு இதில் அரசாங்கம் அக்கறையின்றி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இவை அனைத்தும் அரசாங்கத்தின் போலித்தனத்தை வெளிப்படுத்துகின்றன. ஓரங்கட்டப்பட்ட மக்களின் பிரச்சனைகளை அரசாங்கம் எப்படி சிறுமைப்படுத்துகிறது என்பதையும் காட்டுகின்றன. இது புதிய விஷயமோ வியப்பளிக்கும் விஷயமோ அல்ல.

அரசாங்கம் தனது சட்டத்தை உருவாக்குவதற்கு, மாநிலங்களவையால் ஏற்கப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவில் கூறப்பட்டிருந்த மிக வலுவான, மிகத் தேவையான விதிகளை அரசாங்கம் ஒரு வகையில் “தணிக்கை” செய்துள்ளது எனலாம். இதற்கு முன்பு அரசாங்கம் தாக்கல் செய்த சில சட்ட முன்வரைவுகள்

தொடக்கத்தில் நல்ல அம்சங்களைக் கொண்டிருந்தன. பின்னர், அவை கைவிடப்பட்டு மேலோட்டமான சட்டங்களாகவே கொண்டு வரப்பட்டன. இந்த சட்ட முன்வரைவின் மீது 2016 ஏப்ரல் 29 அன்று நடந்த விவாதத்தில் பாரதிய ஜனதா கட்சியின் எம்பி ஒருவர் இவ்வாறு கூறினார்:

> “ஆனால், மாற்றுப் பாலினத்தவர்கள் தங்களுடன் ஏழைக் குழந்தைகளை எடுத்துச் செல்கிறார்கள். பின்னர் அறுவை சிகிச்சை மூலம் அவர்களையும் மாற்றுப் பாலினத்தவர்களாக மாற்றுகிறார்கள். இது ஒரு பெரிய கிரிமினல் மோசடி. அவர்களுடைய குடும்பத்தினர்கள் கூட பிறகு அவர்களை ஏற்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர், அவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று கோருகிறார். அது வழங்கப்படுமானால் இந்த மோசடி மேலும் அதிகரிக்கும். அதன்மூலம் நாம் அறியாமலே சமுதாயத்திற்கு பெரிய தீங்கு செய்தவர்களாகிவிடுவோம்.” (மக்களவை விவாதங்கள், 2016)

மாற்றுப் பாலினத்தவரை சமுதாயம் ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவர்களுக்கான சட்டம் எதுவும் அவசர கதியில் நிறைவேற்றப்படக்கூடாது என்றும் அந்த எம்பி பேசினார். மாற்றுப் பாலினத்தவரின் அவல நிலைமை குறித்து பொருட்படுத்தவில்லை. சமுதாயத்தில் மாற்றங்கள் தாமாக நிகழவில்லை என்றால், பாகுபாடுகளைக் குற்றமாக்கும் சட்டங்கள் மூலமே அந்த மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதையும் அவர் புரிந்துகொள்ளவில்லை. மக்களவை விவாதத்தில் இவர்களது “குற்றச் செயல்கள்” பற்றியும் பேசப்பட்டது. அப்போது இவர்களை இழிவுபடுத்தும் சொற்களும் கருத்துகளும் பயன்படுத்தப்பட்டன. பிரச்சனையை மிகவும் மலிவுபடுத்துகிற இந்த வாதம், மாற்றுப் பாலினத்தவர்கள் தங்களது ஆயுட்காலம் முழுவதும் எதிர்கொள்கிற குற்றங்களையும் வன்முறைகளையும் குறைத்து மதிப்பிடுகிறது. பெரும்பாலும் அந்தக் குற்றங்களும் வன்முறைகளும் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய இடத்தில் உள்ளவர்களால்தான் நிகழ்த்தப் படுகின்றன.

தற்போது, அரசாங்கம், மாநிலங்களவையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட விரிவான சட்ட முன்வரைவை பின்னுக்குத் தள்ளிவிட்டு, தனது சட்ட முன்வரைவை நிறைவேற்றச் செய்ய முயல்கிறது. அரசாங்கத்தின் சட்ட முன்வரைவு வெறும் கண் துடைப்பே. இது நிறைவேறுமானால் சட்டப் புத்தகத்தில் மற்றொரு மதிப்பற்ற இணைப்பாகவே இருக்கும். மாற்றுப் பாலினத்தவரின் தற்போதைய நிலையை அப்படியே தக்கவைப்பதாகவே இருக்கும். எந்த சமூகத்தை பாதுகாப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று அரசாங்கம் கூறுகிறதோ அந்தச் சமூகத்தின் உரிமைகளை மீறுவதாகவே இருக்கும். ஆயினும், மாநிலங்களவையால் ஏற்கப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவு வர இருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் விவாதிக்கப்படும், அதன் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும். நாம் அனைவரும் நமது செயல்கள் மூலம், மனித மரியாதையில் ஏற்படும் முன்னேற்றமே நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்த்த வேண்டும். சட்டத்தை இயற்றும் இடத்தில் இருப்பவர்கள் காந்தியின் போதனைகளுக்கு செவிமடுக்கும் சூழலை, நலிவுற்ற மக்கள் அவர்களது செயலால் பயன்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

மாற்றுப் பாலினத்தவர்களும் அவர்களுக்காக களப் பணிகளில் ஈடுபடுவோரும் ஒன்று திரண்டு போராட வேண்டும். லட்சக்கணக்கான மாற்றுப் பாலினத்தவருக்கும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய இந்தச் சமூகத்தினருக்கும் அவர்களது வாழ்க்கையும் எதிர்பார்ப்புகளும் நிறைவேறுவதற்கு வழியமைக்கிற ஒரு விரிவான சட்டம் நிறைவேற்றப்படுவதில் எந்தவொரு முயற்சியும் விட்டுப்போகக்கூடாது. அத்தகைய ஒன்றிணைந்த போராட்டத்துக்கான சரியான தருணம் இது. பல்வேறு மாற்றுப் பாலினத்தவர் அமைப்புகள் அரசாங்கத்தின் சட்ட முன்வரைவைக் கடுமையாக விமர்சித்துள்ளன. இதற்கு அரசாங்கம் சூட்டியுள்ள பெயருக்கு பதிலாக, இது “மாற்றுப் பாலினத்தவர் (அவமதிப்பு மற்றும் உரிமை மீறல்) சட்ட முன்வரைவு–2016” அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு நவீன சமுதாயத்தில், அதன் ஒரு பிரிவினர் தங்களுடைய வாழ்க்கைக்காக பிச்சையெடுக்க வேண்டும் அல்லது பாலியல் தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதும், அவர்கள் தங்கள் பிறப்பின் காரணமாக சமூக விரோத சக்திகளால் கடத்தப்படுவார்கள் என்பதும் பயங்கரமான, ஏற்க முடியாத நிலையாகும். தனி மனித உரிமைகளையும் தன்னாளுமையையும் பாதுகாப்பது என்ற கடமையிலிருந்து ஒரு சமுதாயமாகவும், ஒரு அரசு என்ற முறையிலும் நாம் எவ்வளவு பரிதாபகரமாகத் தோல்வியடைந்திருக்கிறோம் என்பதைத்தான் இது காட்டுகிறது. அவர்களைச் சிறை வைத்திருப்பது நமது மனநிலைதான். ஆகவே, அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் நாம் நமது மனங்களை விடுவித்தாக வேண்டும்.

**ஆதாரம்: எகனாமிக் & பொலிடிகல் வீக்லி, 10 செப்டம்பர் 2016**

# சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதி பெறுவதற்கு செலவு அதிகரிக்கிறது

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு ஆணை கோரும் மனு அல்லது ஒரு மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய எண்ணுகிறீர்களா? ஒருமுறைக்கு இரண்டு முறை யோசித்துவிட்டுச் செய்யுங்கள். ஏனெனில், அதற்கான செலவு ஐந்து மடங்காக அதிகரிக்கக்கூடும். சில குறிப்பிட்ட நிலைமைகளில், சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதி பெற நம்பமுடியாத அளவுக்கு மிக அதிகமான கட்டணம் செலுத்த வேண்டிய நிலைமை மனுதாரர்களுக்கு ஏற்படலாம்.

ஆணை கோரும் மனுக்களுக்கான (ஆள்கொணர் மனு தவிர்த்து)நீதிமன்றக் கட்டணத்தை தற்போதுள்ள 200 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்த, கட்டண சீரமைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு பரிந்துரைத்துள்ளது. மேல்முறையீடுகளுக்கு, 2000 ரூபாய் இல்லாவிட்டாலும் குறைந்தது 1000 ரூபாயாவது செலுத்தியாக வேண்டும்.

தலைமை நீதிபதி எஸ்.கே. காவுல், நீதிபதி புஷ்பா சத்யநாராயணா ஆகியோர் கொண்ட அமர்வு, சில ஆணை கோரும் மனுக்களின் மீது பிறப்பித்த ஆணைகளின் அடிப்படையில், 2015 டிசம்பர் 8 அன்று நீதிமன்றக் கட்டண சீரமைப்பு குழு அமைக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி கே. சம்பத் தலைமையிலான அந்தக் குழு வழக்குரைஞர்களிடமிருந்தும், அக்கறையுள்ள பல்வேறு தரப்பினரிடமிருந்தும் விரிவான முறையில் கருத்துகளைக் கேட்டது. பின்னர், தனது அறிக்கையை 2016 செப்டம்பர் 6 அன்று நீதிபதிகள் அமர்விடம் ஒப்படைத்தது.

குழுவின் தலைவரும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட உறுப்பினர்களும் மேற்கொண்ட பணிகளைப் பாராட்டிய தலைமை நீதிபதி காவுல், நீதிபதி ஆர். மகாதேவன் ஆகியோர் கொண்ட முதல் அமர்வு, குழுவின் அறிக்கை எப்போது செயல்படுத்தப்படும் என்பது குறித்து நீதிமன்றத்திற்குத் தகவல் தெரிவிக்குமாறு அரசு வழக்குரைஞருக்கு ஆணையிட்டது.

இதற்கான சட்ட முன்வரைவைத் தயாரிக்கிற கட்டத்துக்கு அரசு வந்துள்ளது என்றும், நாடாளுமன்றத்தில் அதனைத் தாக்கல் செய்வதற்குக் கூடுதலாக கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும் கூடுதல் தலைமை வழக்குரைஞர் நீதிமன்றத்திடம் தெரிவித்தார்.

இதன் ஒரு அம்சம், சட்ட விதிகளின்படி நீதிமன்றக் கட்டணங்களைச் சீரமைப்பது தொடர்பானதாகும். இதனை உயர்நீதிமன்றத்தின் நிர்வாகப் பிரிவு பரிசீலிக்க இயலும் என்றும், அதற்காக விதிகளில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்றும் நீதிபதிகள் அமர்வு கூறியது.

மனுதாரர்களும் வழக்குரைஞர்களும் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிப்பதற்குத் தோதாக, அவற்றை சென்னை உயர்நீதிமன்றத்தின் வலைத்தளத்தில் வெளியிடுமாறு பதிவாளருக்கு நீதிபதிகள் அமர்வு ஆணையிட்டது.

அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 227ன் கீழ், உரிமையியல் மறு ஆய்வு மனுக்களுக்கு தற்போது ரூ.200 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனை ரூ.500 என உயர்த்தலாம் என்று குழு பரிந்துரைத்துள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் (CPC) பிரிவு 115ன் கீழ் பல உரிமையியல் மனுக்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பதிலாக இந்த புதிய மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அரசமைப்பு சாசனத்தின் பிரிவு 226ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஆணைகோரும் மனுக்களை விட இந்த மனுக்கள் குறைவுதான். இந்தப் பின்னணியில், இந்த மனுக்களுக்கான கட்டணத்தை ரூ.500 ஆக நிர்ணயிக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது. CPC பிரிவு 115, மற்றும் நீதிமன்றக் கட்டணச் சட்டம் அட்டவணை 2, சட்ட உரை 11 (o)(p)ன் கீழ் வரும் இதர சட்டங்களின்படி, தாக்கல் செய்யப்படும் அனைத்து உரிமையியல் சீராய்வு மனுக்களுக்கும் ஒரேமாதிரியாக ரூ.200 கட்டணம் வசூலிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 138ன் கீழ் தாக்கல் செய்யப்படும் குற்றப் புகார்களுக்கான கட்டணத்தை, அதிகபட்சம் ரூ.10,000 என்ற வரம்புடன், 5 சதவீதம் அதிகரிக்க பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தைக் கணக்கில் கொண்டு இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வழக்குரை அதிகாரம் (வக்கலாத்து) கோரும் மனுக்கள், பல்வேறு நடுவர்ர அமைப்புகள் முன் வாதாடுவதற்கு அனுமதி கோரும் குறிப்பாணை (மெமொரண்டா) மனுக்கள் மீதான கட்டணங்கள் சீரானதாக இல்லை என்று குழு கருத்துக் கூறியுள்ளது. இந்த மனுக்களுக்கு ரூ.10 என ஒரேமாதிரியான கட்டணம் நிர்ணயிக்கலாம் என்றும் குழு பரிந்துரைத்துள்ளது.நீதிமன்றக் கட்டணச் சட்டத்தின் பிரிவு 21A பின்னத் தொகைகளை 5 காசு என ஒரு முழுத்தொகையாக (rounding) நிர்ணயிக்க வழி செய்கிறது. இதனைச் சுட்டிக்காட்டியுள்ள குழு, இந்த முழுத் தொகையாக்கலை ரூ.1 என நிர்ணயிக்கப் பரிந்துரைத்துள்ளது.

நடுநிலையான வருவாய் என்பதை உறுதிப் படுத்துவதற்காகவே இந்த அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குழு தெரிவித்துள்ளது. அதேநேரத்தில், வருவாய்த் தாக்கத்தை சுருக்கமாக ஆராய வேண்டிய அவசியம் உள்ளது என்றும் குழு தெரிவித்துள்ளது. நீதிமன்றக் கட்டணத்தை, மதிப்பீட்டின்படி (ad valorem) 1% குறைத்தால், மனுக்கள் மற்றும் மேல்முறையீடுகள் மூலமாக (தற்போது தாக்கல் செய்யப்படும் மனுக்களின் எண்ணிக்கை அடிப்படையில்) வசூலாகும் நீதிமன்றக் கட்டணம் 886.7% அளவுக்குக் குறைந்துவிடும், மதிப்பீட்டின்படி 2% என குறைக்கப்பட்டால் நீதிமன்ற மனுக்கள் வருவாய் 73..7% ஆகக் குறையும். மதிப்பீட்டின்படி, 3% எனக் குறைக்கப்பட்டால் நீதிமன்றக் கட்டண வருவாய் 60% அளவுக்குக் குறையக்கூடும் என்று குழு குறிப்பிட்டுள்ளது. நீதிமன்றக் கட்டணம் இவ்வாறு குறைவதை, ஆணை கோரும் மனுக்கள், மேல்முறையீட்டு மனுக்கள், மூல மேல்முறையீடுகள் இதர உரிமையியல் மனுக்கள், உரிமையியல் மறுஆய்வு மனுக்கள் ஆகியவற்றுக்கான நிரந்தர நீதிமன்றக் கட்டணங்கள் அதிகரிப்பதன் மூலம் ஈடுகட்ட முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கட்டண சீரமைப்புக் குழு கூறியுள்ளது.

**ஆதாரம்: தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 14 செப்டம்பர், 2016**

## *ஆயுள் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்ய முடியாது: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு*

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்தாலும், அவர்களை விடுதலை செய்ய முடியாது' என, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்துள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், சிறையில் இருக்கும் நளினி உட்பட, ஏழு பேரை விடுதலை செய்வது தொடர்பான கோரிக்கை உள்ள நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் இந்த தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஒரு வழக்கில், நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, சிவ கீர்த்தி சிங் ஆகியோர் அடங்கிய சுப்ரீம் கோர்ட் அமர்வு, அளித்துள்ள தீர்ப்பில் கூறியதாவது: ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், தண்டனை காலம் குறைப்பு உள்ளிட்ட காரணங்கள் இருந்தாலும், 20 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்ததால், விடுதலை செய்ய முடியாது. தண்டனை காலம் முடிந்து விட்டதாகக் கருத முடியாது. பல்வேறு சிறை விதிகள் மற்றும் சிறை சட்டம் ஆகியவை, இந்திய தண்டனை சட்டத்தை கட்டுப்படுத்தாது. ஆயுள் தண்டனை என்பது, சிறையில் ஆயுள் முழுவதும் இருக்க வேண்டும் என்பது தான்.

அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட அரசுகள், தண்டனையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறைப்பது குறித்து முடிவு எடுக்கலாம். ஆனால், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை, 20 ஆண்டுகள் சிறையில் இருந்ததால், தண்டனை காலம் முடிந்ததாக விடுதலை செய்ய முடியாது. இவ்வாறு, நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பில் கூறியுள்ளனர்.

**ஆதாரம்: தினமலர், 30 ஜூன் 2016**

# நீதிபதிகள் நியமனம் ராணுவ வியூகமல்லை!

**– நீதிபதி கே.டி. தாமஸ்**

நீதித்துறை சில அதிகாரங்களைத் தன்னிடமே தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் நிலையில், அந்தத் துறைக்கும் அரசுக்கும் இடையே பெரிய மோதல் நடக்கிறது என்ற பொதுவான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. நீதிபதிகள் நியமனம் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி ஜே.செலமேஸ்வர், தலைமை நீதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள் பற்றி உடனடியாக, தீவிரமாக ஆலோசித்தாக வேண்டும்.

உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் நியமன முறையானது, 'கொலீஜியம்' எனப்படுகிற, நான்கைந்து நீதிபதிகளைக் கொண்ட ஒரு சிறு குழுவுக்கு மட்டுமே தெரிந்த பரம ரகசியமாக இருந்துவிடக் கூடாது.

நீதியை நிலைநாட்டுவதற்காகவும், பல சந்தர்ப்பங்களில் மக்களையும் தேசத்தையும் பாதிக்கும் பிரச்னைகள், விவகாரங்கள் குறித்து முடிவெடுப்பதற்காகவும் நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். பொதுநலன் விவகாரங்களில் பொறுப்புடன் செயல்படுதல் கட்டாயம் என்பதால், நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள், மிகச் சிறந்தவர்களாக இருக்க வேண்டியது அவசியம். வெளிப்படைத்தன்மைதான் பொறுப்புடன் செயல்படுவதற்கான வழி. முடிவுகளை எடுக்கும் வழிமுறைகளில் வெளிப்படைத்தன்மை இல்லாவிட்டால், பொறுப்புடைமை என்பது இல்லாதாகிவிடும்.

நீதிபதிகள் நியமனத்துக்காக "கொலீஜியம்' முறை உருவானபோதும், நீதிபதிகள் நியமனம் தொடர்பான "3–ஆவது வழக்குக்குப்' பிறகு அது விரிவடைந்தபோதும், வெளிப்படைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். வெளிப்படைத்தன்மை என்றால், ஒவ்வொரு கட்டத்திலும் எடுக்கப்படும் முடிவை வெளிப்படுத்த வேண்டும் என்பது அர்த்தமல்ல. சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப வெளிப்படைத் தன்மை மாறுதல் பெறும்.

பிறர் ஒதுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட நபர் ஏன் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அல்லது சில தகுதிகள் இருந்தும் ஒரு நபர் நீதிபதிப் பதவிக்கு ஏன் கருத்தில் கொள்ளப்படவில்லை– ஏன் நிராகரிக்கப்பட்டார் என்ற காரணங்கள் முக்கியமானவை. உன்னத நிலையில் உள்ள சிறு குழுவில் இடம்பெறும் சில நபர்களின் மனதில் மட்டுமே அந்தக் காரணங்கள் தங்கிவிடக் கூடாது. எதிர்காலத்தில் அந்த விவரங்களை எடுத்துப் பார்க்கும் வண்ணம், கருத்துகள் பதிவு செய்யப்பட வேண்டும். நீதிபதி நியமனம் குறித்த அனைத்து விவரங்களையும் காரணங்களையும் அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அரசியல் சாசனத்தின் கீழ், நீதிபதிகளை நியமிக்க குடியரசுத் தலைவருக்கு மத்திய அரசு அல்லது மத்திய அமைச்சரவைதான் ஆலோசனை வழங்குகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் விவகாரத்தில் தொடக்கத்திலிருந்து இறுதித் தேர்வு வரை நடக்கும் அனைத்து விஷயங்களையும் அதற்கான காரணங்களையும் இந்திய அரசு அறிந்திருக்க வேண்டும். பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்கும் உண்மையான அதிகாரம் பெற்றிருப்பதால், அனைத்து விஷயங்களும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். தேசிய நீதிபதிகள் நியமனக் குழுச் சட்டத்தை உச்சநீதிமன்றம் ரத்து செய்வதாகத் தீர்ப்பளித்தபோது, நாட்டு மக்களும், அரசும் இந்த விவகாரத்தில் எந்தப் பங்களிப்பையும் தர இயலாத நிலைக்குப் புறந்தள்ளப்பட்டனர்.

எதிர்காலத்தில் அரசு, நீதித்துறை அல்லது அரசியல் சாசன அமைப்பு என எந்த அமைப்புமே அறிந்து கொள்ள முடியாதபடி, நீதிபதிகள் நியமன நடவடிக்கைகளைப் பரம ரகசியமாக வைத்திருக்க முடியாது. நாளை ஒரு தேவை ஏற்படும்போது, அந்தப் பதிவுகள் இல்லையென்றால், நீதிபதிகள் நியமன விவகாரத்தில் வெளிப்படைத் தன்மையும் பொறுப்புடைமை என்பதும் இல்லாமல் போய்விடும். ரகசியத் தன்மை ராணுவ வியூகங்களிலும் அறிவியல் கண்டுபிடிப்புகளிலும் தேவைதான். ஆனால் நீதிபதிகள் நியமனத்தில் தேவை இல்லை. இதன் பொருள் நியமனம் குறித்த காரணங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லையென்பதே. வெளிப்படைத் தன்மையற்று இருப்பது, ஜனநாயகத்துக்கும் சட்ட மாட்சிமைக்கும் விரோதமானது.

'கொலீஜியம்' முறையை எப்படி வலுப்படுத்த முடியும் என்பது குறித்து அரசும் உச்சநீதிமன்றமும் கலந்தாலோசிக்க வேண்டிய நேரம் இது. உச்சநீதிமன்ற நீதிபதி தேர்வு என்பது, நாட்டின் பல்வேறு உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் இடையிலிருந்து மட்டும் தேர்ந்தெடுக்கும் முறையாகத் தற்போது உள்ளது.தகுதி அடிப்படை இல்லாமல், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்பட இயலும் நிலை உள்ளது. அந்த உயர்நீதிமன்றத்துக்கு முதல் முதலில் எப்போது நியமிக்கப்பட்டார் என்பதுதான், ஒருவர் மிக மூத்த

நீதிபதியாவதற்கும் தலைமை நீதிபதியாவதற்கும் அடிப்படையாக உள்ளது.

**ரகசியத் தன்மை ராணுவ வியூகங்களிலும் அறிவியல் கண்டுபிடிப்புகளிலும் தேவைதான். ஆனால் நீதிபதிகள் நியமனத்தில் தேவை இல்லை. இதன் பொருள் நியமனம் குறித்த காரணங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லையென்பதே.**

உயர்நீதிமன்றத்துக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் ஒரு நபர் நீதிபதியாக நியமிக்கப்பட்டார் என்பது மட்டுமே அவர் அந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப் படுவதற்கும், பின்னர் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெறுவதற்கும் தகுதியாகிவிட முடியாது. இந்தக் காரணத்தாலேயே, தகுதி வாய்ந்த மூத்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் பலர் உச்சநீதிமன்றத்துக்குப் பதவி உயர்வு பெற முடியாமல் போய்விடுகிறது. எனவே, சிறந்த நீதிபதிகள் என்று கருதப்படும் ஐந்து மூத்த நீதிபதிகளிலிருந்து உச்சநீதிமன்ற நீதிபதியைத் தேர்ந்தெடுப்பது குறித்து 'கொலீஜியம்' ஆலோசிக்கலாம். பணி மூப்பு அடிப்படையில் அல்லாமல், ஐந்து பேரிலிருந்து சிறந்த நபரைத் தேர்ந்தெடுப்பதுதான் சரியான வழியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த முறையிலும், நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான 'கொலீஜியம்' குழுவில் இடம்பெற்றவன் என்ற முறையிலும், நாட்டு நலன், நீதி பரிபாலனம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் நீதிபதிகளுக்கு உள்ள முக்கியத்துவத்தை நான் அறிவேன். எனவேதான், எல்லா அம்சங்களையும் கணக்கில் கொண்டு, சிறப்பான தகுதிகள் உள்ளவர்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளை மட்டும் கருத்தில் கொண்டால் போதாது. மற்றொரு விஷயம்: நீதித் துறையின் நடவடிக்கைகள் மூலமாகப் பிறந்ததுதான் 'கொலீஜியம்' முறை. அரசியல் சாசனம் இயற்றுவதற்கான விவாதங்களின்போது 'கொலீஜியம்' என்ற வார்த்தையைக்கூட யாரும் குறிப்பிடவில்லை. அரசியல் சாசனம் ஏற்கப்பட்ட பிறகு, வெகு காலம் கழித்து, நமக்குக் கிடைத்த பெரும் அனுபவங்களின் அடிப்படையில்தான் 'கொலீஜியம்' என்ற சொல் உருவானது.

நீதிபதி நியமனம் குறித்த '2–ஆவது நீதிபதிகள் வழக்கு'க்குப் பிறகு 'கொலீஜியம்' முறை உருவாக்கப்பட்டது. 'மூன்றாவது வழக்குக்கு' பிறகு, 1998–இல் சில விதிமுறைகளுடன் 'கொலீஜியம்' முறை விரிவடைந்தது. அதன் பிறகு நீண்ட காலம் கடந்துவிட்டது. 'கொலீஜியம்' முறையின் சாதக – பாதகங்களைப் பற்றி நாம் தெரிந்து கொண்டுள்ளோம். உச்சநீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் கேட்ட விளக்கத்தின் அடிப்படையில் 'மூன்றாவது நீதிபதிகள் வழக்கு' உருவானது. முந்தைய தீர்ப்பின் அடிப்படையில் நடைபெற்று வந்த நீதிபதிகள் நியமனத்தில் ஏதேனும் குறைகள் உள்ளனவா, அவற்றை எந்த வகையில் களையலாம் அல்லது சரி செய்யலாம் என்று அறிய ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உருவாக்கினார். இந்த விவகாரம் குறித்து விசாரிக்க கூடுதல் நீதிபதிகளுடன் பெரிய அமர்வை ஏற்படுத்துவது குறித்து மத்திய அரசு சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. நீதிபதிகள் நியமனம் தொடர்பாக கடைசியாக விசாரித்த அமர்வில் ஒன்பது நீதிபதிகள் இருந்தனர். புதிய விசாரணையை 11 அல்லது 13 நீதிபதிகள் கொண்ட அமர்வுவிசாரிக்கலாம்.

'அரசியல் சாசனப் பிரிவை ரத்து செய்ய வேண்டுமானால், அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கூறு பற்றி விசாரிக்க ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு போதாது' என்று கேசவானந்த பாரதி வழக்கின் மீதான தீர்ப்பு கூறுகிறது. இப்போது அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கூறு என்ற முறையில், அரசியல் சாசனத்தையே பரிசீலிக்கும் நிலை தோன்றியுள்ளது. எனவே, அரசியல் சாசனப் பிரிவைக் கேள்விக்கு உள்ளாக்கும் வழக்கை விசாரிக்க, குறைந்தபட்சம் கேசவானந்த பாரதி வழக்கை எத்தனை நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்ததோ, அதே எண்ணிக்கையைக் கொண்ட அமர்வு தேவை. நீதிபதிகள் எண்ணிக்கையை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீர்மானிக்கலாம். இது தொடர்பாக, உச்சநீதிமன்ற விதிமுறையில் திருத்தம் கொண்டு வரலாம்.

தேசிய நீதிபதிகள் நியமனக் குழுச் சட்டம் தொடர்பான தீர்ப்பு தவறானது என்று உச்சநீதிமன்றத்தின் தற்போதைய நீதிபதிகள் பலரும், முன்னாள் நீதிபதிகள் பலரும் கருதுகிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. நாட்டு நலன் கருதி, அரசியல் சாசனத்தின் செயல்பாடு கருதி, அந்தத் தீர்ப்பு தொடர்பாக மறுபரிசீலனை தேவையா, உயர் நிலையில் நீதிபதிகளை நியமிக்கப் புதிய நியமன முறை தேவையா என்பதெல்லாம் குறித்து உச்சநீதிமன்றம் ஆலோசிக்க மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

கட்டுரையாளர்:
முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி.
நீதிபதி கே.டி. தாமஸ்

**ஆதாரம்: தினமணி, 10 செப்டம்பர் 2016**

# சட்ட தினம் உணர்த்தும் கடமைகள்!

– கே. சந்துரு

இந்திய சட்ட வரலாற்றில் 26.11.1949 என்ற தேதி முக்கிய தேதியாகும். அந்த நாளில்தான் அரசமைப்புச் சட்ட இறுதி வடிவத்தினை, அரசமைப்புச் சட்டப்பேரவை தீர்மானமாக நிறைவேற்றிய நாள். 67 ஆண்டுகளுக்குப் பின்னர், சட்ட தினத்தைக் கொண்டாடிவரும் நாம், கடந்து வந்த பாதையை நினைவுகூர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 400 ஆண்டுகள் காலனி ஆதிக்கத்தில் சுரண்டப்பட்டுவந்த மக்களுக்குக் கிடைத்த அரசியல் சுதந்திரம், அதையொட்டி உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசுக்கு என்றே எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம், அதை உருவாக்கிய தலைசிறந்த சட்ட மேதைகளின் குழு, அக்குழுவின் தலைவராக டாக்டர் அம்பேத்கர் வீற்றிருந்தது போன்றவற்றையெல்லாம் நினைக்கும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தை எழுதுவதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் தலைவரான அம்பேத்கர், உறுப்பினர்களின் ஓட்டெடுப்புக்கு விடும் முன்னர் தீர்மானத்துக்கு ஆதரவாக ஆற்றிய சரித்திரப் புகழ்பெற்ற உரையின் ஒரு பகுதி:–

"1950 ஜனவரி 26–ம் தேதியன்று, நாம் முரண்பாடுகள் நிறைந்த வாழ்க்கையில் நுழையப் போகிறோம். அரசியலில் நமக்குச் சமத்துவம் இருக்கும். ஆனால், சமூக, பொருளாதாரத் தளத்தில் – சமத்துவமற்ற தன்மையே நீடிக்கும். அரசியலில் நாம் 'ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒருநெறி' என்பதை அங்கீகரிப்போம். ஆனால், நமது சமூக, பொருளாதார வாழ்க்கையில், நம்முடைய பொருளாதார, சமூக அமைப்பின் காரணமாக ஒரு மனிதனுக்கு ஒரு நெறி என்ற கோட்பாட்டைத் தொடர்ந்து மறுத்துவருவோம்.

இதுபோன்ற முரண்பட்ட வாழ்க்கை முறைகளுடன் நாம் எவ்வளவு காலம் வாழப் போகிறோம்? நம்முடைய சமூக, பொருளாதார வாழ்க்கையில் இன்னும் எத்தனை காலத்துக்கு நாம் சமத்துவத்தை மறுக்கப்போகிறோம்? இப்படித் தொடர்ந்து மறுத்துவருவதன் மூலம் அரசியல் ஜனநாயகத்துக்குப் பேரிடர் மட்டுமே விளைவிப்போம். இம்முரண்பாடுகளை நாம் முடிந்த வரை குறைவான காலத்துக்குள் களைந்திட வேண்டும். இல்லையெனில், சமத்துவமின்மையால் அல்லலுறும் மக்களால் இம்மன்றம் மிகுந்த சிரமங்களுக்கிடையே கட்டியுள்ள அரசியல் ஜனநாயகமே தகர்க்கப் பட்டுவிடும்."

## சோஷலிசம்

டாக்டர் அம்பேத்கர் தலைமையில் உருவாகி, உறுப்பினர்களின் முழு ஆதரவையும் பெற்ற அச்சட்டத்தின் ஆரம்ப வடிவில் சோஷலிசம் என்ற வார்த்தை எங்கேயும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், அரசமைப்புச் சட்டத்தின் பல பகுதிகளில் சோஷலிசக் கூறுகள் எதிரொலித்தன. சட்டப் பிரிவு 39 நிறைவேற்றப்பட்டிருந்தால், முழுமையான சோஷலிச நாடாக இந்தியா உருவெடுத்திருக்கும். அப்பிரிவில் அரசை வழிகாட்டும் நெறிமுறைகளாகக் கூறப்பட்டிருப்பவையாவன:

"பொருளாதாரச் சுரண்டலுக்கும், ஏற்றத் தாழ்வுகளுக்கும், சமத்துவமின்மைக்கும் முடிவு கட்டி, நியாயமான சமூக அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய கடமையை அரசின் மேல் சுமத்துகிறது. "மக்கள் அனைவருக்கும் சமூக–பொருளாதார அரசியல் நீதி கிடைக்கக் கூடியதான சமுதாய அமைப்பினை உருவாக்கி, நல அரசை உருவாக்க அரசாங்கம் முயல வேண்டும். தேசிய வாழ்வின் அனைத்து ஸ்தாபனங்களிலும் அவ்வுணர்வு பரவ வகை செய்ய வேண்டும் என்று நெறிமுறைக் கோட்பாடுகளின் அடித்தளமாக விளங்கும். ஆண்–பெண் உள்ளிட்ட அனைத்துத் தொழி லாளர்களின் ஆரோக்கியமும் பலமும் சிறாரின் இளம்பிராயமும் தவறாகப் பயன்படுத்தாம லும், பொருளாதாரத் தேவைகளின் காரணமாகக் குடிமக்கள் தமது வயதுக்கும், வலுவுக்கும் பொருத்தமில்லாத வேலையைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படாமலும்; சிறாரும் இளைஞரும் சுரண்டப்படாமல் காக்குமாறும் அரசு தன்னுடைய கொள்கைளை நெறிப்படுத்த வேண்டும்."

சோஷலிசக் கருத்துகள் முழுவதிலும் பொதிந்துள்ள அரசமைப்புச் சட்டத்தின் அக்கருத்தை மேலும் வலியுறுத்துவதற்காக 1977–ல் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டு, அதன்படி இந்தியா இறையாண்மை பெற்ற சோஷலிச மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. அந்த முகப்பு வார்த்தைகள் நான்கும் இந்தியாவைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்களென்று கூறலாம். இதில் ஒரு தூண் பழுதுபட்டாலும் 120 கோடி மக்களைத் தாங்கி நிற்கும் அவ்வமைப்பு தகர்ந்துவிடும் ஆபத்து உள்ளது. அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 66 ஆண்டுகள் ஆன பின்னரும், இந்த நான்கு தூண்களும் பலவிதத்தில் தாக்கப்பட்டுள்ளன.

## ஜனநாயகம் எதிர்கொள்ளும் ஆபத்துகள்

1975–77–ல் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலைப் பிரகடனம், அரசமைப்புச் சட்டத்தையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு, ஜனநாயகத்தைக் கேலிக்குள்ளாக்கியது. பாபர் மசூதி இடிப்பும், இந்துத்துவத்தின் ஆட்சி என்ற பரப்புரையும் மதச்சார்பற்ற கொள்கைகளுக்கு வேட்டுவைத்துள்ளன. தனியார்மயமாக்கலும், உலகமயமாக்கலும் அரசமைப்புச்

சட்டத்தில் பொதிந்துள்ள சோஷலிசக் கோட்பாடுகளுக்கு ஆபத்து விளைவிக்கின்றன. திருத்தப்படும் தொழிலாளர் சட்டங்கள் இதற்குச் சரியான உதாரணங்களாகும். தொழிலாளர் சட்டம் திருத்துவதற்கு முன்னாலேயே தனியார் மயமாக்கலை வரவேற்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளும், அதன் சில நீதிபதிகளின் தனிப்பட்ட கருத்துகளும் சோஷலிச அணுகுமுறையைக் கேலிக்கூத்தாக்கிவிட்டன.

சட்ட நாளை அனைத்து நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அம்பேத் கரின் 125–வது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்றும் உத்தரவிட்ட மத்திய அரசின் தொடர் நடவடிக்கைகள், நம்மைக் கவலைக்குள்ளாக்குகின்றன. "இந்தியா சோஷலிச நாடு என்பதெல்லாம் வெற்று முழக்கம். இது ஒரு முதலாளித்துவ நாடு. எனவே, நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படை இக்கருத்தை ஒட்டியே இருக்க வேண்டும்" என்று ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது வேதனையளிக்கிறது.

கட்டாய இலவசக் கல்வி என்பது அடிப்படை உரிமையா என்ற கேள்வி அரை நூற்றாண்டு காலம் நீதிமன்றங்களில் எழுப்பப்பட்டு வந்தது. அதற்கெல்லாம் முடிவுகட்டும் விதமாக 2002–ல் அரசமைப்புச் சட்டம் மேலும் ஒரு முறை திருத்தப்பட்டு, 21–A என்ற பிரிவு கொண்டுவரப்பட்டது. அதன்படி 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி என்பது அடிப்படை உரிமையாக்கப்பட்டது. ஆனால், அதற்கான சட்டமோ பத்து வருடங்களுக்குப் பின்னால் உருவாக்கப்பட்டது. புதிய சட்டத்தின்படி (2012) அரசு அக்கடமையை நிறைவேற்றும் பொறுப்பைத் தனியார்களுக்கும் தாரை வார்த்தது. 20 நூற்றாண்டுகளாகக் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்ட பகுதியினருக்குப் புதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டதைக் கொண்டாடுவதற்கு முன்னரே அச்சட்டத்தின் பிரிவுகள் குற்றுயிராக்கப்பட்டன.

இன்று தமிழகத்தில் 42% மாணவர்கள், கட்டணம் செலுத்தியே பள்ளிக் கல்வியைப் பயின்றுவருவதைப் பார்க்கும்போது, சட்டத்தின் அடிப்படைக்கும் சமுதாயத்தின் செயல்பாடுகளுக்கும் எட்டாத இடைவெளிதான் தெரிகிறது. புதிய நூற்றாண்டு தொடங்கிய பின்னரும், இந்நாட்டில் ஐந்தில் ஒரு பகுதியினருக்கு சமநீதி மறுக்கப்பட்டுவருவதையும், இன்னும் உலர்கழிவுகளைத் தலையில் சுமப்பது ஒரு பகுதியினரின் வேலையாக்கப்பட்டிருப்பதையும், பெரும்பான்மையான மக்கள் இன்னமும் வறுமைக்கோட்டின் கீழ் வாடிவருவதையும் பார்க்கும்போது, கூரையே வானமாக்கிக் கொண்டு குடியிருக்கும் லட்சக்கணக்கான இந்தியர்களைக் காணும்போது, முன்னர் கூறிய டாக்டர் அம்பேத்கரின் கூற்றுகள்தான் மேலும் மெய்ப்பிக்கப் பட்டிருக்கின்றன.

சட்ட தின உறுதிமொழி என்பது சடங்காக மாறிவிடாமல், அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் நடை முறைப்படுத்தப்பட வேண்டும். நெறிகாட்டு வழிமுறைகள் சட்ட உரிமைகளாக மாற்றப்பட வேண்டும். பொது சிவில் சட்டம் என்று ஓயாமல் குரலெழுப்பும் காவிக் கட்சியினர், அரசமைப்புச் சட்டத்தின் மற்ற பகுதிகளை வசதியாக மறந்துவிட்டது ஏனோ ?

**– கே. சந்துரு, நீதிபதி (ஓய்வு), உயர் நீதிமன்றம்**

## 3 ஆண்டுகள் ஆன நிலையிலும் லோக்பால், லோக்ஆயுக்தா குறைதீர்க்கும் அதிகாரிகளை நியமிக்காதது ஏன்?

2016–09–15

புதுடெல்லி: லோக்பால் மசோதா நிறைவேறி 3 ஆண்டுகள் ஆன நிலையிலும் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா குறைதீர்க்கும் அதிகாரிகளை நியமிக்காதது ஏன் என மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. டெல்லியை சேர்ந்த பாஜ தலைவரும் வக்கீலுமான அஸ்வினி குமார் உபாத்யாய் என்பவர் உச்சநீதிமன்றத்தில் லோக் ஆயுக்தா தொடர்பான மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா மசோதாவுக்கு கடந்த 2014 ஜனவரி 1ம் தேதி ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியுள்ளார். அதே ஆண்டு ஜனவரி 16ம் தேதி அமலுக்கு வந்துள்ள நிலையில் அது தொடர்பான புகார்களை விசாரிப்பதற்கு என தனி அதிகாரிகள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

லோக்ஆயுக்தா மசோதா நிறைவேற்றப்பட்ட ஒரு ஆண்டிலேயே மாநில அரசுகள் அதை அமல்படுத்த வேண்டி நிலையில் பல மாநில அரசுகள் லோக்ஆயுக்தாவை இது வரை செயல்படுத்தவில்லை. எனவே இதை முறையாக செயல்படுத்துவதற்கு ஏற்ற கூடுதல் நிதி, தேவையான அதிகாரிகள், கட்டமைப்பு வசதி ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ரஞ்சன் கோகோய் மற்றும் பி.சி. பந்த் ஆகியோர் அடங்கிய அமர்வு, இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். அதில் லோக் ஆயுக்தா முறையாக செயல்பட தேவையான அறிவுறுத்தல்களை மாநில அரசுகளுக்கு வழங்கவேண்டும், மேலும் கூடுதல் நிதியுதவி, தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தரவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.




*Source: Laughing Colours*

__வெளியீடு__

காவல் நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்பு பிரச்சார அமைப்பின் சார்பில்
மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பால் (HRF)
வெளியிடப்பட்ட கருத்து சாதனம்

எண். 54, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. தமிழ்நாடு.
தொ.பே. 044–22353503, தொ.நகல். 22355905 மின்அஞ்சல் : contact@hrf.net.in
இணையதளம் : www.hrf.net.in